www.eelamview.com

# விடுதலைப்புலிகள்

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வமான ஏடு. குரல் 11. பெப்ரவரி 87.

# தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரம்



தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தை இராணுவ யுத்தத்தால் அடக்கிவிட முடியாமல் திண்டாடிய சிங்கள இனவாத அரசு தமிழர்கள்மீது ஒரு பொருளாதார யுத்தத்தை ஏவிவிட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழுள்ள யாழ்ப்பாணக் குடாநாட்டை பொருளாதார ரீதியாகத் திருகி, மக்களைப் பட்டினி போட்டு பணிய வைத்து, சுதந்திர எழுச்சியை நசுக்கி விடலாமென சிங்கள அரசு கனவு காண்கிறது. ஆனால் எம்மைப் பொறுத்தவரை சிங்கள அரசின் இந்த நடவடிக்கையானது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட உறுதியான அத்திவாரமாகவே நாம் கருதுகிறோம்.

இந்தப் பொருளாதார யுத்தத்தை எமது மக்கள்மீது ஏவிவிட்டதிலிருந்து நாம் சிறிலங்காவின் பிரஜைகள் அல்லர் என்பதையும் நாம் சிங்கள அரசின் ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட ஒரு அந்நியமான மக்கள் இனம் என்பதையும் சிங்கள அரசு உலகிற்கு பகிரங்கமாகப் பிரகடனப் படுத்தியுள்ளது. தென் இலங்கையிலிருந்து தரப்படும் அத்தியாவசிய சேவைகளை துண்டித்ததன்மூலம் வட பகுதித் தமிழர்களுக்கும் தென் பகுதித் சிங்களவர்களுக்கும் மத்தியில் எஞ்சியிருந்த பொருளாதார உறவும் அறுபட்டுள்ளது. இதன் காரணமாக, ஜெயவர்த்தனா அரசே பிரிவினைக்கான புறநிலைகளை உருவாக்கித் தந்திருக்கிறது.

தமிழீழத் தனியரசு கோரி போராட்டம் நடத்திவரும் அதேவேளை, தொடர்ந்தும் தென்னிலங்கையோடு தொடர்புடைய தங்குநிலைப் பொருளாதாரத்தில் நாம் தங்கியிருப்பது மிகவும் ஆபத்தானது என்பதனை இன்று தமிழீழ மக்கள் உணர்ந்துள்ளனர். எமது விடுதலை இலட்சியத்தை நாம் வென்றெடுப்பதாயின் இந்த தங்குநிலையிலிருந்து நாம் முற்றாக விடுபட்டு தன்னிறைவான பொருளாதார வாழ்வை நாம் தழுவிக் கொள்ளவேண்டும். ஆகவே, சிங்கள இனவாத அரசு விடுத்துள்ள இந்த சவாலை நாம் துணிவுடன் உறுதியுடன் எதிர்கொள்ளவேண்டும். ஆயுத போராட்ட களத்தில் மட்டுமன்றி, பொருளாதார அரங்கிலும் நாம் ஒரு போராட்டத்தை ஆரம்பிக்கவேண்டும். பொருளாதார களத்தில் நாம் ஈட்டும் சாதனைகளே எமது விடுதலைப் போராட்டத்தின் பாதுகாப்பு அரணாக அமையும்.

தேசிய விடுதலைப் போராட்டம் கூர்மையடையும் காலகட்டத்தில் பொருளாதார நெருக்கடிகளை நாம் எதிர்கொள்ள நேருமென நாம் ஏற்கனவே வலியுறுத்தி வந்திருக்கிறோம். இதனைக் கருத்தில் கொண்டே 'நெருக்கடி காலப் பொருளாதாரத் திட்டம்' ஒன்றை வகுத்து தன்னிறைவான பொருளாதார வாழ்வுக்கான வழிமுறைகளை மக்களுக்கு தெளிவுபடுத்தியிருந்தோம். தமிழீழத்தின் ஒவ்வொரு பிரஜையும் எமது பொருளாதார முயற்சியின் வெற்றிக்காக தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுதல் தனது பிரதான கடமை என்பதையும் வலியுறுத்தியிருந்தோம்.

இன்று தோன்றியுள்ள நெருக்கடி நாம் எதிர்பார்த்தது ஒன்றே. இது எமது விடுதலைப் போராட்டத்திற்கு விடுக்கப்பட்டிருக்கும் ஒரு சவால். தமிழீழ மக்களின் உறுதியை உடைத்துவிட, எமது எதிரி பாவித்துள்ள இறுதி ஆயுதம். இதனை நாம் வெற்றிகரமாக முறியடிப்பதாயின் எமது இயக்கம் முன்வைத்த சுயசார்பு பொருளாதாரத் திட்டத்தை தீவிரமாக அமுல்படுத்த மக்கள் எம்மோடு முழுமையாக ஒத்துழைக்கவேண்டும். தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்திக்காக நாம்மேற்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தமிழீழத் தனியரசுக்கு இடப்படும் அடித்தளங்கள் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும்.

## போர்முனையில் புலிகள்

1.9.86.ல் இருந்து 31.12.86 வரை நடைபெற்ற மோதல்கள்: 109

இறந்த ஆயுதப் படையினர்: 206

சேதமாக்கப்பட்ட அரச வாகனங்கள்: 4 ஜீப் வண்டிகள், 2 ட்ரக் வண்டிகள், 1 எல்வ் வான், 6 கவச வாகனங்கள், 3 தென்னுப்பிரிக்க பவலோ கவச வாகனங்கள்

சேதமாக்கப்பட்ட ஹெலிகொப்டர்கள்: 2

சிதறடிக்கப்பட்ட படகு: 1 இஸ்ரேலிய விசைப்படகு


## அரச பயங்கரவாதம்

இறந்த தமிழ் பொதுமக்கள்: 139 பேர்

கைது செய்யப்பட்ட பொதுமக்கள்: 953 பேர்

கற்பழிக்கப்பட்ட பெண்கள்: 11 பேர்

எரிக்கப்பட்ட உடைமைகள்: 201 வீடுகள், 3 அரிசி ஆலைகள், 1 விவசாய கந்தோர், 1 ஆஸ்பத்திரி, 2 கம்பாலை, 1 மரக்காலை, 1 ஐஸ் தொழிற்சாலை, 1 உழவு இயந்திரம், 2 கார்கள்.




மக்களின் ஆதரவில் விடுதலைப்புலிகள்

www.eelamview.com

www.eelamview.com

தமிழீழத்தில் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை எமது விடுதலை இயக்கம் எத்தனையோ சோதனைகளுக்கு, எத்தனையோ நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து தேசிய சுதந்திர இலட்சியத்தை முனைப்புடன் முன்னெடுத்து வருகிறது. நீண்டதும் கடினமானதுமான இந்த விடுதலைப் பயணத்தில் நாம் எமது முதன்மையான எதிரியாகிய சிங்கள அரசையும் அதற்கு முண்டுகொடுக்கும் சர்வதேச நாசகார சக்திகளையும் மட்டும் எதிர்த்துப் போராடவில்லை. எமக்கு மத்தியில், எமது விடுதலைக் களத்தில், எமது மக்களின் விடுதலை என்ற போர்வையில், ஆயுதமேந்தி எதிர்ப்புரட்சி சக்திகளாக உருவெடுத்த எட்டப்பர் கோஷ்டிகளுக்கு எதிராகவும் நாம் போராட வேண்டிய துர்ப்பாக்கிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டோம்.

ஏன் இந்த சூழ்நிலை எழுந்தது? இந்த முரண்பாடுகள் தோன்றியமைக்கும் அவை மோதலாக வெடித்ததற்கும் காரணமென்ன? நாம் ஏன் இந்தக் கடும் நடவடிக்கையை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டோம். இதனால் எமது சோசலிசப் புரட்சிகர இலட்சியங்கள் பாதிப்படையுமா? எமது தேசிய விடுதலைப் பயணம் பின்னடையுமா? இந்தக் கேள்விகளுக்கு வரலாற்று ரீதியாக, தர்க்க ரீதியாக உண்மை விளக்கங்களை அளிக்க நாம் கடமைப் பட்டுள்ளோம்.

எமது இயக்கமானது காலத்தின் கோலத்திற்கு ஏற்ப காளான்போல் முளைக்கவில்லை. எமது இயக்கத்திற்கு ஒரு நீண்ட, புரட்சிகர வரலாறு உண்டு. எமது இயக்கத்தின் வரலாறுதான் தமிழீழத்தின் ஆயுதப் போராட்ட வரலாறாக பரிணமம் பெற்றிருக்கிறது. நாம் இன்று ஒரு வரலாற்று சக்தியாக, வரலாறு படைக்கும் சக்தியாக வளர்ச்சி கண்டுள்ளோம்.

எமது விடுதலை இயக்கத்தின் தனித்துவமும் மகத்துவமும் எமது இயக்கத்தில் இழையோடும் ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலும்தான் தங்கியிருக்கிறது. இந்த சீரிய தார்மீகப் பண்புகளை வித்திட்டு வளர்த்த பெருமை எமது இயக்கத் தலைவர் பிரபாகரனையே சாரும். தமிழீழத்தில், ஆயுதப் புரட்சி இயக்கத்திற்கு அத்திவாரமிட்ட காலத்திலிருந்து இன்றுவரை, இயக்கப் போராளிகளின் நல்லொழுக்கத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து, தேச சுதந்திரப் போராட்டத்தை ஒரு புனிதமான பணியாக, ஒரு உன்னதமான கருமமாக பேணி வளர்ப்பவர் எமது தலைவர். பிரபாகரனின் மிகவும் கண்டிப்பான ஒழுங்கு விதிகளால் நெறிப்படுத்தப்பட்ட எமது இயக்கமானது வீரம், தியாகம், விடுதலையுணர்வு போன்ற உயரிய இலட்சியப் பண்புகளுக்கு இலக்கணமாக அமைந்தது. இந்தத் தனித்தன்மையானது ஏனைய விடுதலை அமைப்புகளிலிருந்து எம்மை வேறுபடுத்தி இனம்காட்டியதுடன் விடுதலைப் புலிகளுக்கும் ஏனையோருக்கும் மத்தியில் முரண்பாட்டை வளர்த்தது.

83 ஜூலை இனப் பூகம்பம் தமிழீழ அரசியல் அரங்கை என்றுமில்லாதபடி உலுப்பியது. அதனால் வெடித்தெழுந்த விடுதலையுணர்வும் ஆவேசமும் புதிய இளம் பரம்பரையை பற்றிக் கொண்டது. ஆயுதப் போராட்ட களத்தில் குதிக்க ஆயிரமாயிரம் இளைஞர்கள் அணிதிரண்டனர். இந்தப் புரட்சிகர சூழ்நிலை சில எதிர்ப் புரட்சி சக்திகளுக்கு அரிய சந்தர்ப்பமாக அமைந்தது. மக்களால் ஒதுக்கப்பட்டு, சீரழிந்து சிதறுண்டு தமிழகத்தில் பதுங்கியிருந்த ஒரு சில குழுக்கள் தமிழீழ சூழ்நிலையை தமது விரிவாக்கத்திற்குப் பயன்படுத்தின. அலைபோல திரண்டுவந்த இளைஞர்களுக்கு வலைவீசி, செத்துப்போன இந்த அமைப்புகள் புத்துயிர்பெற்று எழுந்தன.

பழையதும் புதியதுமாக எண்ணற்ற விடுதலை அமைப்புகள் தோற்றம் கொண்டன. எந்தவித விசாரணையுமின்றி, தேர்வுமுறையின்றி, கட்டுப்பாடுகளின்றி நடைபெற்ற. இந்தப் படை திரட்டலில் ஏதுமறியாத அப்பாவி இளைஞர்களோடு காடையர்கள், கள்ளர்கள், தெருச் சண்டியர்கள், கொலைகாரர்கள் போன்ற சமூக விரோத சக்திகள் விடுதலை அமைப்புகளில் சேர்ந்து 'போராளிகள்' என்ற முகமூடியை அணிந்துகொண்டன. திடீர் வீக்கமும், விரிசலும் பெற்ற இந்த அமைப்புகளில் ஆயுத மோகமும், இராணுவ வாதமும், அராஜகமும் தலை தூக்கின. புரட்சிகர ஆயுதப் போராட்ட களம், ஆயுதம்தரித்த அராஜகவாதிகளின் தளமாக மாறியது. தமிழீழத்தில் அரச பயங்கரவாதத்தோடு தமிழ்ப் பயங்கரவாதமும் கைகோர்த்துக் கொண்டது. அத்தோடு, ஏகாதிபத்திய நாசகார சக்திகளின் தாசர்களாக திரைமறைவில் இயங்கிவந்த சில தமிழ்ப் பிரமுகர்களும் இந்தப் பயங்கரவாத விடுதலை அமைப்புகளின் ஆலோசகர்களாக ஊடுருவல் செய்தனர். இந்த அமைப்புகளின் திடீர் எழுச்சியும் இராணுவ வளர்ச்சியும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தின. இதனால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழீழ மக்களும் விடுதலைப் புலிகளுமே.

வீட்டுக் கொள்ளை, வழிப் பறிக்கொள்ளை, கோவில் கொள்ளை, பாடசாலைக் கொள்ளை, கூட்டுறவுக் கொள்ளையாக தமிழீழம் எங்கும் அராஜகச் செயல்கள் தலைவிரித்தாடின. திருட்டுத் தொழிலை புரட்சிகரப் போராட்ட நடவ்டிக்கையாக தழுவிக் கொண்டன சில இயக்கங்கள். பொது ஸ்தாபனங்கள் துப்பாக்கி முனையில் நிறுத்தப்பட்டதால் சிவில் நிர்வாகம் ஸ்தம்பிதமடைந்தது. போதாக் குறைக்கு பொது மக்கள் பகிரங்கமாக மிரட்டப்பட்டனர், தாக்கப்பட் டனர், இழிவுப்படுத்தப்பட்டனர். சாதாரண குடும்பப் பிரச்னைகளுக்கு எல்லாம் துப்பாக்கி நீட்டப்பட்டது.

வடக்கிலிருந்து வெடித்துக் கிளம்பிய இந்த அராஜகம் கிழக்கிலங்கைவரை பரவி இஸ்லாமியத் தமிழ் மக்களையும் சீண்டியது. இஸ்லாமிய வர்த்தகர் கள் கொள்ளையடிக்கப்பட்டனர். கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். துப்பாக்கி முனையில் இம்சைப் படுத்தப்பட்டனர். மார்க்சியவாதம் பள்ளிவாசல் பிரச்னை களில் தலையிட்டது. இயக்கங்களின் இந்த அடாவடித் தனத்தால் தமிழ்-இஸ்லாமிய கலவரங்கள் வெடித் தன. கைதேர்ந்த சிங்கள அரசும் இதற்கு தூபம் போட்டது.

தஞ்சம்கொடுத்த தமிழ் நாட்டிலும் இயக்கங்களின் 'புரட்சிகர' நடவடிக்கைகள் தலைதூக்கச் செய்தன. கள்ளக்கடத்தல், ஆட்கடத்தல், கொள்ளை கொலையாக தமிழகத்திலும் வன்முறை தாண்டவமாடியது. இதன் ஒட்டுமொத்த விளைவாக தமிழீழ சுதந்திர இயக்கத்திற்கு என்றுமில்லாதபடி களங்கம் ஏற்பட்டது.

இயக்கப் பயங்கரவாதத்தின் உச்சகட்டமாக சில அமைப்புகள் சித்தரவதை முகாம்களையும், மரண கூடங்களையும் அமைத்துக்கொண்டன. கேள்விகள் எழுப்புவோர், விமர்சனம் செய்பவர்கள், இயக்கத்தைவிட்டு வெளியேற விரும்புபவர்கள் துரோகிகளாக முத்திரை குத்தப்பட்டனர். அப்பாவிகளான இந்த இளம் போராளிகளுக்கு சித்திரவதை முகாம்களில் நிகழ்ந்த கதி மிகவும் பயங்கரமானது. காட்டுமிராண்டித்தனமாக இந்தக் கொடும் செயல்களும், குரூரக் கொலைகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகவும் கறைபடிந்த ஒரு அத்தியாயமாகும்.

தமிழீழ மக்கள் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டனர். விடுதலை அமைப்புகள் எதிரியோடு போராடுவதை முற்றாகத் தவிர்த்து மக்கள் விரோத யுத்தத்தில் இறங்கியதால் சுதந்திரப் போராட்டம் திசை திரும்பும் ஆபத்தான கட்டம் எழுந்தது.




இந்த நெருக்கடியான சூழ்நிலை எமது விடுதலை இயக்கத்திற்கு ஒரு பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் அமைந்தது. எமது விடுதலைப் போராளிகளோ சிங்கள இராணுவ முகாம்களை முற்றுகையிட்டு, ஆயுதப் படைகளோடு சதா சமரிட்டு, களத்தில் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தனர். எமது முற்றுகையால் வட பிராந்தியம் விடுவிக்கப்பட்ட பிரதேசமாக மாறிவந்தது. இந்தச் சூழ்நிலையால் வடக்கில் சுதந்திரமாக நடமாடமுடிந்த ஏனைய இயக்கங்கள் போராட்ட பழுவை எம்மீது சுமத்திவிட்டு, எமது இயக்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் முற்று முழுதாக இறங்கின. எமக்கெதிராக மிகவும் கீழ்த்தரமான, விசமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்துவிட்டதுடன் எம்மோடு மோதி எம்மை இராணுவ ரீதியாக ஒழித்துக் கட்டவும் துணிந்தனர்.

எமது போராளிகளை மிரட்டுவது, துப்பாக்கியால் குறி வைப்பது, தூஷண வார்த்தைகளால் திட்டுவது, எமது ஆதரவாளர்களை தாக்குவது, கடத்துவது, பணம்பறிப்பது இப்படியாக நாளுக்கு நாள் ஆத்திரமூட்டும் சம்பவங்கள் நிகழ்ந்து வந்தன.

ஒரு இயக்கம், நிராயுதபாணிகளாக நின்ற எமது ஆறு இளம் போராளிகளை கடத்திச் சென்று, சித்திரவதை செய்து, கண்டம் துண்டமாக வெட்டி, நிலத்தில் புதைத்தது. இன்னொரு இயக்கம், எமது ஆதரவாளர்களான வயோதிப தந்தையையும் அவரது மகனையும் பகிரங்கமாக சுட்டுக் கொலை செய்தது. மற்றொரு இயக்கம் இரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களை கடத்திச் சென்று கொலை செய்துவிட்டு எமது இயக்கத்தின்மீது பழியைச் சுமத்தியது.

நாம் பொறுமையை இழக்கவில்லை. மிகவும் நிதானமாக, சகிப்புத்தன்மையுடன் நிலைமையை சமாளித்து மோதலை தவிர்த்துக்கொண்டோம். முதலில் நாம் இந்த முரண்பாடுகளை பேச்சுக்கள் மூலம் களைய முயன்றோம். ஈழத் தேசிய விடுதலை முன்னணியுடன் கூட்டுறவை ஏற்படுத்த இந்தப் பிரச்னைகளை எழுப்பினோம். தமிழகத்தில் இயங்கிய ஈழத் தேசிய விடுதலை முன்னணித் தலைமைகள் எமது முறையீடுகளை அசட்டை செய்தன. அத்தோடு தமது இயக்க உறுப்பினர்களின் அடாவடித்தனத்தை நியாயப்படுத்தவும் முற்பட்டன. இதனால் இயக்கக் கூட்டுறவு அர்த்தமற்றதாகியது.

இதற்கிடையில், தமிழீழத்தில் நிலைமை படுமோசமடைந்தது. எமக்கும் டெலோ இயக்கத்திற்கும் மத்தியில் முரண்பாடு கூர்மையடைந்து வந்தது. இதன் உச்சகட்டமாக எமது மூத்த உறுப்பினர் இருவர் கடத்தப்பட்டும் எமது தளபதிகளில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுமான சம்பவங்கள் எமக்கும் டெலோவுக்கும் மத்தியில் ஆயுத மோதலாக வெடித்தது. இறுதியில் 'டெலோவினர்' நிராயுதபாணிகளாக்கப்பட்டு, தமிழீழ அரசியல் அரங்கிலிருந்து அந்த இயக்கம் தடை செய்யப்பட்டது.

டெலோவின் அட்டகாசம் அடங்கியது. மிகவும் ஆபத்தான, பிற்போக்கான ஒரு அராஜகக் கும்பலிடமிருந்து ஆயுதப் பறி முதல் செய்யப்பட்டதை தமிழீழ மக்கள் பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து சிங்கள முப்படைகளால் மேற்கொள்ளப்பட்ட பெரும் படையெடுப்பை எமது விடுதலை இயக்கம் வெற்றிகரமாக முறியடித்தது. இச் சம்பவங்களை அடுத்து தமிழீழத்தில் அமைதியும் ஒழுங்கும் ஓரளவு நிலைநாட்டப்பட்டது. இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக்கொண்டதாலும் சமூக விரோதச் செயல்கள் குறைந்ததாலும் மக்கள் மத்தியில் பெரும் நிம்மதி ஏற்பட்டது. ஆனால் இந்த நிம்மதிக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப். குட்டையைக் குழப்பியது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கட்டுப்பாடின்மையும், கறைபடிந்த வரலாறும் எமது மக்களுக்கு தெரியாததல்ல. மார்க்சியம், மக்கள் புரட்சி என்ற சிவப்புச் சாயங்களைப் பூசிக்கொண்டு மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டுவந்த இந்த அமைப்பு டெலோவுக்கும் எமக்கும் ஏற்பட்ட மோதலை அடுத்து எமது இயக்கத்திற்கு எதிராக திட்டமிட்ட ஒரு சித்தாந்த யுத்தத்தில் குதித்தது. எம்மை 'பாசிஸ்டுகள்' என்றும் சி.ஐ.ஏ. கைக்கூலிகள் என்றும் மிகவும் மோசமான முறையில் வசைபாடத் தொடங்கியது.

பொய்ப் பிரச்சாரத்தில், உண்மைகளை திரித்துக் கூறுவதில், செய்திகளை மிகைப்படுத்தி தம்பட்டம் அடித்துக் கொள்வதில் ஈ.பி. இயக்கம் தனக்கே உரித்தான மேதாவிலாசத்தைக் கொண்டது என்பது யாவரும் அறிந்த விசயம். பத்திரிகை அறிக்கை மூலம் இராணுவ முகாம்களை அழிப்பதிலும் கடற்படைத் தளங்களை தவிடுபொடியாக்குவதிலும் இவர்களுக்கு நிகர் வேறுயாருமல்லர். இதனால் இவர்கள் எமக்கெதிராகப் புனைந்துவிட்ட புராணக்கதைகளை மக்கள் செவிசாய்க்கவில்லை. சர்வகலாசாலை மாணவன் ஒருவன் கடத்தப்பட்டதாக எம்மீது பழி சுமத்தி இவர்கள் பின்னணியில் நின்று நடத்திய உண்ணாவிரதமும் ஊர்வலமும் பிசு பிசுத்துப் போயிற்று. மக்களின் ஆதரவு எமக்குப் பின்னால் மலைபோல வளர்ந்துள்ளதால் ஈ.பி.யின் பிரச்சாரத் தில்லுமுல்லுகள் எடுபடவில்லை.

இதற்கிடையில், இந்த மக்கள் புரட்சிவாதிகளின் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு சிகரம் வைக்குமாற் போல இரு கொலைச் சம்பவங்கள் கிழக்கிலங்கையிலும் தமிழ் நாட்டிலும் நிகழ்ந்தன. கிழக்கிலங்கையில் இஸ்லாமியத் தமிழரை தொடர்ச்சியாகத் துன்புறுத்திவந்த ஈ.பி. தோழர்கள் திருகோணமலையில் ஒரு இஸ்லாமிய ஆசிரியரைக் கடத்திச்சென்று சுட்டுக்கொன்றனர். இந்தச் சம்பவம் திருகோணமலை இஸ்லாமிய மக்களை கொதிப்படையச் செய்து கிளர்ந்தெழ வைத்தது.

தமிழகத்தில், சூளைமேட்டில், ஒரு தெருச்சண்டையில் ஈடுபட்ட ஈ.பி.யின் மக்கள் இராணுவத் தளபதியும் அவரது தோழர்களும் நிராயுதபாணிகளாக நின்ற மக்கள் கூட்டம்மீது இயந்திரத் துப்பாக்கிகளைப் பிரயோகித்து ஒரு இந்தியப் பிரஜையை சுட்டுக்கொன்றனர். இந்தக் கொலைச் சம்பவம் இந்தியா அடங்கிலும் பெரும் பரபரப்பையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியது. இதுபோன்று தமிழ்நாட்டு சட்டத்தையும் ஒழுங்கையும் அத்துமீறி நடைபெற்று வந்த இயக்கங்களின் கிரிமினல் நடவடிக்கைகள் தமிழ்நாட்டு மக்களிடையே எமது விடுதலைப் போராட்டத்திற்கு இருந்தவந்த ஆதரவையும் அனுதாபத்தையும் வெகுவாகக் குறைத்தது. சூளைமேட்டுக் கொலைச் சம்பவத்தை அடுத்து தமிழ் நாட்டுப் பொலிசார் எமது இயக்கம் உட்பட சகல அமைப்புகளிடமிருந்தும் ஆயுதங்களைப் பறிமுதல் செய்தனர். ஈ.பி.யின் இந்த பயங்கரவாதச் செயல் ஈழத் தமிழர் சுதந்திர இயக்கத்திற்கு கரிபூசுவதாக அமைந்தது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எமது இயக்கத்திற்கு எதிராக மிகவும் கீழ்த்தரமான பொய்ப் பிரச்சாரத்தை நடத்திவந்தது ஒருபுறமிருக்க எமது இயக்கத்தை இராணுவ ரீதியாக ஒழித்துக்கட்டவும் சதித் திட்டம் தீட்டியது. இச் சதித் திட்டத்திற்கு டெலோ, புளொட் போன்ற அமைப்புகள் உடந்தையாக இருந்தன. 'முற்போக்கு முன்னணி' என்ற போர்வையில் இந்த மூன்று அமைப்புகளும் ஒரு இரகசியக் கூட்டணியை அமைத்து எமது இயக்கத்திற்கு எதிராக செயல்படத் தொடங்கின. இவர்களுக்குப் பின்னால் 'சனநாயக முன்னணி' என்ற கோஷத்துடன் சந்திரகாசன் அணியினர் இயங்கினர்.

www.eelamview.com

www.eelamview.com

இந்த நாசகாரத் திட்டத்தை நிறைவேற்றும் நோக்கத்தோடு, டெலோவிலிருந்து சிதறியோடி தமிழ் நாட்டில் பதுங்கியிருந்த இளைஞர்களை ஈ.பி. அமைப்பு ஆயுதமயப்படுத்தி தமிழீழத்திலுள்ள தனது முகாம்களில் குவித்துவந்தது. ஈ.பி.யின் மக்கள் இராணுவ சீருடையுடன் டெலோவினர் மீண்டும் தமிழீழத்திற்குப் படை எடுத்தனர்.

அடுத்ததாக, எமது விடுதலை வீரர்கள் இராணுவத்துடன் சதாமோதி தமது வெடிமருந்து சக்தியை தீர்த்துவரும் அதேவேளை, ஈ.பி. இயக்கம், எதிரியோடு மோதுவதைத் தவிர்த்து, பெருமளவு ஆயுதங்களை சேகரித்து பதுக்கி வந்தது. எமது வெடிமருந்து சக்தி விரயமாகும்வரை காத்திருந்து, திடீரென, எதிர்பாராதவிதத்தில் முதுகில் குத்துவதுதான் இவர்களது சதித் திட்டம்.

எமது இயக்கம் மீது திடீர் இராணுவத் தாக்குதல் நடத்தி, எம்மை அழித்துவிடுவதற்கு தயாரிக்கப்பட்ட சதித் திட்டத்தின் முழு விபரங்களும் அடங்கிய ஆவணம் ஒன்று எம்வசம் சிக்கியது. இந்தியாவிலுள்ள ஈ.பி.யின் தலைமையகத்திலிருந்து அமீன் என்பவரால், ஈ.பி.யின் மக்கள் இராணுவத்தின் இரண்டாவது பொறுப்பாளர் சுரேஸ் என்பவருக்கு இந்த இரகசிய ஆவணம் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த சதித் திட்டத்தின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு.

* விடுதலைப் புலிகள் மீது மின்னல்வேக அதிரடித் தாக்குதல் நடத்தி எமது அமைப்பை முற்றாக அழித்துவிடுதல்.

* பதுக்கிவைத்திருந்த ஆயுதங்களை எடுத்து, தயார் நிலைக்கு கொண்டுவந்து, அதிரடிப் பிரிவுகளுக்கு பகிர்ந்தளித்தல்.

* சகல பிரதேசங்களிலுமுள்ள விடுதலைப் புலிகளின் தளங்களையும் கண்காணித்து திடீர் தாக்குதல் நடத்துவதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்தறிதல்.

* விடுதலைப் புலிகளின் இராணுவ முகாம்களை திடீரென தாக்கி அவற்றை முற்றாக சிதைத்து விடுவதற்காக தயார் நிலையில் இருத்தல்.

* அதிரடித் தாக்குதலை மேற்கொள்ளும் சமயம் விடுதலைப் புலிகளின் முகாம்களை எதிரியின் முகாம்களாக கருதி. அவர்களது தகவல் தொடர்புகளை துண்டித்தல்.

* விடுதலைப் புலிகளின் முக்கியமான தளபதிகளை கொலைசெய்து இயக்கத்தை நிலைகுலையச் செய்தல்.

* விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்பு நிலையங்கள் மீது தாக்குதலை நடத்தி அவற்றை நிர்மூலமாக்குதல்.

* இத் திடீர் தாக்குதலை நடத்திமுடித்து, விடுதலை புலிகள் அமைப்பை நாசம்செய்த பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எப். சமாதானத்தையும் ஒற்றுமையையும் விரும்புவதாகவும் தற்பாதுகாப்பிற்காகவே இந்த தாக்குதல் நடவடிக்கை எடுத்ததாகவும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தல்.

இந்தச் சதித்திட்டமானது ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் முகமூடியைக் கிழித்து அதன் கோரமான முகத்தை காட்டுகிறது யார் உண்மையான பாசிஸ்டுகள், பதவிவெறி பிடித்தவர்கள், பயங்கரவாதிகள் என்பதை இந்தக் கொலைக்காரத் திட்டம் அம்பலமாக்கியிருக்கிறது. கார்ல் மார்க்ஸின் சுலோகங்களை எழுப்பும் இந்தக் காக்கைவன்னியர்கள் மக்களின் விடுதலைக்காகப் போரிடுவதற்கு ஆயுதம் ஏந்தவில்லை. கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக களத்தில் இரத்தம் சிந்தி மகத்தான தியாகங்களைப் புரிந்துவரும் மக்கள் போராளிகளான எம்மை ஒழித்துக் கட்டவே இவர்கள் ஆயுதம் தரித்தனர். தேச சுதந்திரத்தை ஒரு புனித இலட்சியமாகக் கொண்ட புரட்சிகர இயக்கத்தை அழித்துவிட்டு சிங்கள அரசுடன் சமரஸம் செய்துகொள்வதே இவர்களது நாசகார நோக்கம். ஆகவேதான், இந்த எட்டப்பர் கோஷ்டியை நாம் நிராயுதபாணிகளாக்கத் தீர்மானித்தோம் இவர்களது ஆயுதங்கள் பறிக்கப்படாதுவிட்டால் அவை நிச்சயமாக எமக்கு எதிராகவும், மக்களுக்கு எதிராகவும், திருப்பப்பட்டிருக்கும் என்பது திண்ணம்.

ஆயுதம்தரித்த விடுதலைப் போராட்டம் என்பது அதியுயர்ந்த அரசியல் போராட்ட வடிவம். விடுதலை என்ற உயரிய இலட்சியத்திற்காக உயிரைத் தியாகம் செய்யும் உன்னத போராட்ட வடிவம் இது. இரத்தம் சிந்தும் இந்தப் புரட்சிப் போராட்டத்தை உண்மையான புரட்சிவாதிகளால்தான் முன்னெடுக்க முடியும். ஒழுங்கும் கட்டுப்பாடும், தன்னலமற்ற தியாக உணர்வும், மனிதாபிமானமும் மக்கள் நேயமும் இந்தப் புரட்சிவாதிகளின் தார்மீகப் பண்புகளாக அமையவேண்டும். தர்மத்தை நிலைநாட்டவே நாம் இந்த ஆயுதப் போராட்டத்தில் குதித்துள்ளோம். இந்த தர்மயுத்தத்தில் அதர்மத்தைப் பேணும் அராஜகவாதிகளுக்கு இடமில்லை. இந்தத் தீய சக்திகளால், எமது புனித போராட்டம் களங்கப்படுவது ஒருபுறமிருக்க இந்த சக்திகளை நாம் ஆயுதபாணிகளாக வளரவிட்டால் எமது விடுதலை இலட்சியத்தை நாம் அடைவது சாத்தியமில்லை.

எமது ஒடுக்கப்பட்ட மக்களின் அரசியல், பொருளாதார விடுதலையை இலட்சியமாகக் கொண்ட உண்மையான புரட்சிகர அமைப்புகளுடன் நாம் கைகோர்த்துப் போராடத் தயார். இந்தப் புரட்சிவாதிகளை எம்மோடு அணிசேர்ந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம். இந்த நெருக்கடியான வரலாற்று சூழ்நிலையில் ஒரு தேசிய சுதந்திர இயக்கமாக நாம் எமது போராட்டத்தை நெறிப்படுத்தி முன்னெடுப்பது அத்தியாவசியமாகும்.

# புல்லுமலையில் புயல்

அழகான கிராமம்.

திரும்பிய பக்கமெல்லாம் கல்நிலத்தில் வேர்விட்டு நிமிர்ந்த காட்டு மரங்கள்-எலுமிச்சைத் தோட்டம்-நெடிய கொல்லைகளில் கிளம்பும் காற்றில் சோளக்கதிர்களின் கூத்து-குருவிகளின் கீச்சொலிகள்.....

புல்லுமலை-தென் தமிழீழத்தின் எல்லையில் பதுளை செல்லும் பாதையில்-கிட்டத்தட்ட மட்டக்களப்பில் இருந்து 30 மைல் தொலைவில் காட்டுக்குள் ஒளிந்து கொண்டிருக்கிறது.

தெருவோரத்தில் பத்துக்கடைகள்-இந்த ஊருக்கு எப்படியாவது ஒரு சிறு நகரத்தின் சாயலைப் பூசி அழகு பார்க்கும் முயற்சி-ஆனாலும் புல்லுமலை கிராமந்தான்.

சிங்களவரின் தொல்லை தாங்கமுடியாமல் தேயிலைத் தோட்டத்திலிருந்து கொஞ்சக்' காலத்துக்கு முன்பு குடிபெயர்ந்த மலையகத்தமிழர்கள் இங்கேதான் வந்து குடியமர்ந்தார்கள்-தமிழீழத்தின் பழங்குடி மக்கள் வாழ்ந்த அந்தக் குக்கிராமம் பெரிதாயிற்று.

எரிமலையில் குடியிருப்பது போல் மலையகத் தமிழர்கள் எத்தனை காலந்தான் சிங்களவருக்கு நடுவில் இருப்பார்கள்?

தஞ்சம் புகுந்த தேயிலைத் தோட்டத் தமிழர்களைத் தமிழீழம் தாங்கிக்கொண்டது.

புல்லுமலையை ஒட்டினாற்போல்-வெலிகாகண்டி-கோப்பாவெளி-உறகாமம்-மரப்பாலம்-என்று தென்தமிழஈழத்தில்-15 மைல் நீள நிலப்பரப்பில் உட்கார்ந்த மலையகத்தமிழன் தமிழீழத்தின் பாசத்தில் பூரித்துப்போனான்.

இனம் இனத்தோடு சேர்ந்த இணைப்பின் சின்னமாய் ஒரு நிலத்துண்டு!

புல்லுமலையில் பெரிய வசதிகள் என்று எதுவும் இல்லை-நிலத்தைக் கிழித்துத்தான் வாழ்க்கை-ஆனாலும் ஏதோ ஓர் இயற்கை அழகும் நிறைவும் அந்த மண்ணில் எப்போதும் இருந்தது.

ஆம்-அவர்கள் எதிர்பார்த்த அந்தக் கொடுமையான நாள் வந்தது.

10-11-86 இல் சிங்கள சிறீலங்காவில் 'வேட்டைநாய்கள்' புல்லுமலையில் வெறி கொண்டு பாய்ந்தன.

இரத்தமழை

'மங்கள ஓயா' என்ற சிங்களவரின் எல்லைக்கிராமம் புல்லுமலையில் இருந்து 10 மைல் தொலைவில் இருக்கிறது. இராணுவத்தினர் அந்தக் கிராமத்துக்குச் சென்று 'சிங்களக்குண்டர்களையும்' 'ட்றக்' வண்டிகளில் ஏற்றிக்கொண்டுதான் அன்று ஊருக்குள் நுழைந்தார்கள்.

புல்லுமலை நொறுங்கிப் போயிற்று.

"ஐயோ! சண்டாளங்க என்னைக் கற்பழிக்கிறாங்களே!" ஒரு தமிழச்சி நெருப்பின் நடுவில் நின்று கத்தினாள்-அவள்தான் தேவர் கந்தசாமியின் மனைவி. பாவம்-கணவனும் மனைவியும் பிணங்களாய்ச் சுருண்டார்கள். அமுதலிங்கத்தின் மனைவிக்கும் அதே கதிதான்-அவன்-அவன் மனைவி-அவன் மகன்-எல்லோருமே சடலங்களாய்....

ஒரு வீட்டில் சின்னஞ்சிறு குழந்தை வீறிட்ட அலறல் கேட்டது. அப்புறம் அது மெல்ல மெல்ல அடங்கிப் போயிற்று. சிறீகுமார் என்ற ஒன்றரை வயதுப் பிள்ளைமீது திணிக்கப்பட்ட மிருகத்தனமான 'சாவு'தான் அது.

சந்தானம் கால் ஊனமானவள்-முரடர்கள் அவளைச் சாகடித்து எறிந்தார்கள்.

இரத்தவெள்ளத்தில் எத்தனை பிணங்கள்......ராஜரெட்ணம், மனைவி, 3 பிள்ளைகள்-மன்னர். அவர் மகள்-இன்னொரு வீட்டில் 9 வயதுச்சிறுமி வசந்தி-ஒரு கணவன், மனைவி-மொத்தம் 18 தமிழுயிர்கள்!

பூரிப்போடு அந்த அழகான பச்சைமண்ணில் உலாவித் திரிந்த தமிழினத்தின் நாளங்கள் அறுக்கப்பட்டுப் புல்லுமலை சிவப்பாயிற்று.



மாதா கோயிலின் இனிய மணியோசை-வானத்தில் இலைச்சிறகு விரிக்கும் காட்டுக்கிளிகள்-பசுவின் பாலுக்குக் குறைச்சல் இல்லை-எங்கோ ஒரு குக்குறுப்பாச்சான் குருவி கத்திக்கொண்டிருக்கும்-வயல் வரப்புக்கட்டில் 'பொன்னான்காணியும்' 'திராயும்' கொழுத்துப் படர்ந்து-ஓ! அழகான கிராமம்!

சிங்களவனுக்குப் புல்லுமலை வயிற்றெரிச்சலை மூட்டுவதில் ஒன்றும் வியப்பில்லை.

மலைநாட்டில்-சிங்களவருக்கு நடுவில்-தேயிலைத்தோட்டத்தில் நடுங்கி வாழ்ந்த காலம் மாறி-இன்று-தமிழீழத்தில் தமிழரோடு தமிழராகிப் பலமாய் நிமிர்ந்து நிற்கிறார்களே தமிழர்கள்....

'புல்லுமலையை எரித்துச் சாம்பலாக்க வேண்டும்'.

சிங்களவன் புழுங்கிக்கொண்டுதான் இருந்தான்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்வீறு கொள்ளத் தொடங்கிய 1983ஆம் ஆண்டுக்குப் பின்-தமிழீழத்தின் ஏனைய பகுதிகளைப் போலவே-மட்டக்களப்பு மாவட்டத்திலும் சிங்கள வெறியாட்சியின் இராணுவ வலை முறையாக விரிக்கப்பட்டது.

புல்லுமலையிலும் ஓர் இராணுவமுகாம்-குருவிகளோடும் புறாக்களோடும்-வாழ்ந்த அந்த இனிய மக்களுக்கு நடுவில் 'கழுகுக்கூடு'போல.....

ஒவ்வொருநாளும் அந்தக் கிராமத்தின் வீதிகளில்-இராணுவ ஜீப்' வண்டிகளின் உறுமல் கேட்டுக்கொண்டே இருந்தது.

பெண்கள் தெருவில் இறங்க அஞ்சினார்கள்.

மாதா கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த அந்தச் சின்னப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளின் வரவு கொஞ்சம் கொஞ்சமாய் நின்று போயிற்று.

ஊரில்

சாவின் கொடுமையான கூத்து.

வெறியாட்டத்தின் முடிவில் -இராணுவ வெறியர்கள் 21 தமிழர்களை (ஆண்கள்) கைதிகளாய் முரட்டுத்தனமாக இழுத்துச் சென்றார்கள்....அத்தனை தமிழர்களும் நொறுங்கிப்போன உடல்களோடு-கதறலோடு-

இன்று வரை அவர்கள் திரும்பவே இல்லை....

வெறியர்கள் புல்லுமலையை முடிந்தவரை நொறுக்கித் தூளாக்கி விட்டுத்தான் வெளியே போனார்கள்.

ஒருபுறம் வீடுகள்-கடைகள் எரிந்தது. சாம்பல் மேட்டில் நாய்கள் ஊளையிட்டன.

பாடுபட்டுக் காட்டில் வியர்வை சிந்தித் தேடிய ஒன்றிரண்டு துணி மணிகள்-சட்டி-பானை-அந்தச் சின்னப் 'பணமுடிச்சு -எல்லாமே 'சிங்களக்குண்டரிடம்' பறிபோன நிலையில் மக்கள் காடுகளை நோக்கி ஓடினார்கள்.

நெடிய முதிரை மரங்கள்-கருங்காலி-தேக்கு-அவர்கள் மகிழ்ந்து நடந்து ஒருகாலத்தில் நேரம் போக்கிய காடுகள்....இன்று ஒரே நாளில் அவர்களுடைய பதினெட்டு உயிர்களைப் பலிகொண்ட சுடுகாடாய்.....

உன்னிச்சை-பாவற்கொடிச்சேனை-6ம் கட்டை-8ம் கட்டை ஆகிய கிராமங்களில் இன்று புல்லுமலை மக்கள் அகதிகளாய் உட்கார்ந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒன்று தெரியும்.

புல்லுமலை இராணுவ முகாமைச் சேர்ந்த ஐந்து இராணுவ வெறியர்களைப் பிணங்களாக்கிப் போட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் மீண்டும் வருவார்கள்.

அந்த நாள் நிச்சயம் பிறக்கும்.

அன்று......

தமிழீழத்தின் அந்த அழகான எல்லைக் கிராமத்தில் துப்பாக்கிகளால் 'வேலி' போடப்படும்!

www.eelamview.com

www.eelamview.com






# மேற்கு சகாரா வி

**வ**டமேற்கு ஆபிரிக்காவில் காலனித்துவ ஆதிக்கத்திடமிருந்தும் அண்டை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்தும், அடிமைச் சங்கிலியை அறுத்துக் கொண்டு, தனது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டியவாறு புதிய நாடொன்று உருவாகி வருகிறது. அதுதான் மேற்கு சகாரா. கஷ்டமும், துயரமும் நிறைந்த சூழ்நிலையில் பாலை மணலில் விடுதலைக் கனலை எழுப்பி, கெரில்லாப்போர்முறைமூலம் வெற்றிகளைக் குவித்துவரும் சகாரன் மக்களின் தியாகம் நிறைந்த போராட்டம் வரலாறு காணாத அதிசயமாகும். பூரணவிடுதலையை நோக்கி வீறுநடை போடும் சகாரன் மக்கள் விடுதலை என்னும் பாலைவனச் சோலையை விரைவில் அடைவது நிச்சயம்.

**வ**டமேற்கு ஆபிரிக்காவில் உள்ள சகாராப் பாலைவனப்பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு நாடுதான் மேற்குசகாரா எனப்படும் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசாகும். இன்று 63 நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மேற்கு சகாராவின் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிரதேசம் 2,86,000 ச. கி. மீற்றர் பரப்பளவாகும். இக் குடியரசு மேற்கு எல்லையாக அட்லாண்டிக் சமுத்திரத்தையும், வடக்கு எல்லையாக மொரோக்கோவையும், தெற்கு, கிழக்கு எல்லைகளாக மொரிட்டானியாவையும் கொண்டுள்ளது. மேற்குசகாராவின் பெரும் பகுதி பாலைவனப்பிரதேசமாகவே இருக்கின்ற போதிலும், இங்கு காணப்படும் கனிவளங்கள் கணக்கிலடங்காதவையாகும். "உலகத்தின் பொஸ்பேற் பொக்கிசம்" என்று வர்ணிக்கப்படும் இப்பிரதேசத்தில்தான் உலகத்தின் மொத்த பொஸ்பேற் உற்பத்தியின் 50% பெறப்படுகின்றது. இங்கு மீன் வளமும் நிறைந்திருக்கிறது. சுமார் 1000 கி. மீற்றர் நீளமுள்ள கடற்கரைப்பிரதேசத்தை கொண்டுள்ள மேற்கு சகாராவில் வருடாந்தம் பிடிக்கப்படும் மீனின் அளவு 2 மில்லியன் தொன்னாகும். மேலும் சிறியளவில் இரும்பு செம்பு, டைட்டேனியம் போன்ற கனிமங்களும் காணப்படுகின்றன. இங்கு வாழ்கின்ற மக்கள் "சகார வீஸ்" அல்லது "சகாரன்கள்" என அழைக்கப்படுகின்றனர். இனகலாச்சார ரீதியாக சகார வீஸ் மக்களை ஆராய்ந்தால் இவர்கள் "பெய்டன்" (Beidan) அல்லது மூர்ஸ் (Moors) இனமக்களின் ஒரு குழுவினராவர். இக்குழு Mixed Berber நாடோடிகளினதும், அரபு மற்றும் கறுப்பு ஆபிரிக்கர்களினதும் வழிதோன்றல்களாவர். இவர்கள் ஹசானியா (Hassaniya) எனப்படும் அரபு மொழியைப் பேசுகிறார்கள். இச்சமூகத்திற்குள் பல்வேறுபட்ட சாதிப்பிரிவுகளும் காணப்படுகின்றன.

### ஸ்பானிய காலனியாதிக்கம்

ஸ்பெயினின் காலனியாதிக்கத்திற்குள் சிக்கிக்கொண்ட சகார மக்கள் நீண்டகாலமாக (1976 வரை) ஸ்பானியரின் கட்டுப்பாட்டுக்குள்ளேயே தமது வாழ்க்கையை தொடர்ந்தனர். கல்வியறிவு குறைந்த, வெளியுலகம் தெரியாத, மிக மோசமான நிலையில் வாழ்ந்து கொண்டிருந்த இம்மக்களை ஸ்பானிய காலனித்துவம் படுமோசமான சுரண்டலுக்குள்ளாக்கியது. தமது சொந்தப் பிரதேசத்திலேயே தமது உரிமைகளை, செல்வங்களை அனுபவிக்கமுடியாது, தமது அபிலாசைகளை வெளிக்காட்டமுடியாது, அன்னியருக்கு அடிமைகளாக ஸ்பானிய காலனித்துவத்துக்குள் கட்டுண்டு கிடந்தார்கள். சகாரா மக்கள் நீண்டகால அடிமை வாழ்க்கையின் பின்னரேயே, மிகவும் காலம் தாழ்த்தியே தமது சுதந்திரத்திற்கான தேவையை உணர ஆரம்பித்தனர். குறிப்பாக 1960 களின் பின்னரே அங்கொன்றும், இங்கொன்றுமாக, ஸ்பானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான எதிர்ப்புகள் தோன்றின.

### முதல் தேசிய விடுதலை இயக்கம்


பலவருடகால போராட்டங்களினதும், எதிர்ப்புக்களினதும் பின்னணியில் 1973-ம் ஆண்டு மே மாதம் 10-ம் திகதி பொலசாரியோ முன்னணி (Polisario Front) என்ற சகாரன் மக்களின் தேசிய விடுதலை இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. மக்கள் இயக்கமான இப் பொலிசாறியோ முன்னணி ஸ்பானியரிடமிருந்து மேற்கு சகாராவை விடுவித்துக் கொள்வதற்காக ஆயுதம் தாங்கிய புரட்சிப் போராட்டத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டது. பொலிசாறியோ முன்னணி அமைக்கப்பட்ட 10-வது நாளிலேயே ஸ்பானியருக்கு எதிரான ஆயுத நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எல் ஜங்கா (El Janga) என்ற இடத்தில் உள்ள இராணுவப்படைக்கு எதிராக இத்தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் பலம்பொருந்திய ஸ்பானிய இராணுவத்தால் இந்நடவடிக்கை முறியடிக்கப்பட்டது. பொலிசாறியோவின் முதல் நடவடிக்கை தோல்வியுற்ற போதிலும் சகாராவின் பல்வேறு பாகங்களிலும் ஸ்பானிய எதிர்ப்புகள் அதிகரித்தன. விடுதலை முன்னணிக்கு மக்களின் ஆதரவு பெருகியது. 1975 வரை முன்னணி ஸ்பானிய ஆதிக்கத்திற்கு எதிராக வெற்றிகரமான கெரில்லாத்தாக்குதல்களை நடத்தியது. இதற்குத் தேவையான ஆயுதங்கள் லிபியாவால் வழங்கப்பட்டது. இதனால் சகாராவில் ஸ்பானிய ஆதிக்கம் ஆட்டங்காணத் தொடங்கியது. மேலும் 1975-ல் மேற்கு சகாராவிற்கு பயணம் செய்த ஐக்கியநாடுகள் குழு பொலிசாறியோவின் சுதந்திரப் போராட்டத்தை நியாயப்படுத்தியதுடன் தனது ஆதரவை பொலிசாறியோ முன்னணிக்கு வழங்குவதாகக் கூறியது. இதனையடுத்து ஸ்பானியர் மேற்கு சகாராவை விட்டு வெளியேற வேண்டியநிலை உருவானது.

### புதிய ஆக்கிரமிப்பாளர்கள்

மேற்கு சகாராவில் ஸ்பானிய ஆதிக்கத்திற்கு ஏற்பட்ட (இக்கட்டான) நிலையை தொடர்ந்து மேற்கு சகாராவின் எல்லையோர நாடுகளான மொறேக்கோவும், மொரிட்டானியாவும் வளம்மிக்க சகாராவை ஆக்கிரமிக்கும் இரகசிய சூழ்ச்சித் திட்டங்களை மேற்கொண்டன. இதன் ஒரு நடவடிக்கையாக 1975-ம் ஆண்டு நவம்பர் 6-ம் திகதி மொறேக்கோ மன்னர் 2-ம் ஹசனின் திட்டப்படி மொறேக்கோ மக்கள் மேற்கு சகாராவிற்குள் ஊடுருவுமாறு செய்யப்பட்டனர். இஸ்லாமிய பாதயாத்திரை (Green March) என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆக்கிரமிப்பு ஊடுருவலில் 3 லட்சம் மொறேக்கோ மக்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக ஆயிரக்கணக்கான மொறேக்கோ றோயல் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர். இந்தப் பாதயாத்திரையின் மூலம் மொறேக்கோ மேற்கு சகாரா மீது தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றது. இச்சம்பவங்களையடுத்து மொறேக்கோ துருப்புக்கள் தமது எல்லையோடு இருந்த மேற்கு சகாராவின் வடபிரதேசத்திற்குள் படிப்படியாக ஊடுருவி நிலைகொள்ள ஆரம்பித்தன. இதேபோல மேற்கு சகாராவின் தென்பகுதியை மொரிட்டானியாத் துருப்புக்கள் ஆக்கிரமிக்கத் தொடங்கின. இவ்விரு நாடுகளினதும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு ஸ்பெயின் மறைமுகமாக தனது ஆதரவை வழங்கியது. இதனால் சுதந்திரத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொலிசாறியோ முன்னணிக்கு புதிய தாக்கங்களும், நெருக்கடிகளும் ஏற்பட்டன.



1.



3.

### மாட்றிட் முக்கூட்டு உடன்படிக்கை

மேலும் 1975-ம் ஆண்டு நவம்பர் மாதம் 17-ம் திகதி மேற்கு சகாரா சம்பந்தமாக ஸ்பெயினும், புதிய ஆக்கிரமிப்பாளர்களான மொறேக்கோவும் மொரிட்டானியாவும் மாட்றிட் நகரில் செய்துகொண்ட மாட்றிட் முக்கூட்டு உடன்படிக்கை, புதிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு சாதகமாக அமைந்ததுடன் மொறேக்கோவும், மொரிட்டானியாவும், மேற்கு சகாராவை தம்மிடையே பங்கிடவும் வழிவகுத்தது. இவ்வுடன்படிக்கையில் மக்களின் உரிமைகளும், அபிலாசைகளும், விருப்பங்களும் புறக்கணிக்கப்பட்டன. இவ்வுடன்படிக்கையை அடுத்து மொறேக்கோவும், மொரிட்டானியாவும் மேற்கு சகாராவை பங்கிட ஆரம்பித்தன. ஸ்பானிய காலனித்துவம் தனது துருப்புக்களை அங்கிருந்து வாபஸ் பெறத்தொடங்கியது.

### சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசின் தோற்றம்

விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பொலிசாறியோ முன்னணி ஸ்பானியத் துருப்புக்கள் வெளியேறத் தொடங்கியதும் 1976-ம் ஆண்டு பெப்ரவரி 27-ம் திகதி 286,000 ச.கி. மீற்றர் பரப்பளவுக்கு நிர்ணயிக்கப்பட்ட மேற்கு சகாராவை சகாரன் அரபு ஜனநாயக குடியரசாக (Saharan Arab Democratic Republic) பிரகடனப்படுத்தியது. சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு தன்னுரிமையுடைய, சுதந்திரமான, இறைமையுடைய நாடு என அறிவித்த பொலிசாறியோ, சகாராவை அங்கீகரிக்குமாறு உலகநாடுகளிடம் வேண்டுகோள் விடுத்தது. மேற்கு சகாரா பிரகடனப்படுத்தப்பட்ட 1976-ம் ஆண்டில் 10 உலக நாடுகள் அதனை அங்கீகரித்தன. S.A.D.R. இன் முதலாவது பிரதமராக முகமட் லாமின் உல்ட் அகமட் (Mohammed Lamine Ould Ahamed) தேர்ந்தெடுக்கப்பட்டார். 1976 மார்ச் 4-ம் திகதி S.A.D.R. கான மந்திரிசபையும் அமைக்கப்பட்டது. ஸ்பெயினும் தனது துருப்புக்களை முற்றாக வாபஸ் பெற்றுக்கொண்டது. எனினும் சகாரன் அரபு ஜனநாயக குடியரசின் ஆட்சி நீடிக்கவில்லை.

### அண்டை நாடுகளின் படையெடுப்பு

மொறேக்கோவும், மொரிட்டானியாவும் மாட்றிட் உடன்படிக்கையை காரணம் காட்டி சகாரன் அரபு ஜனநாயக குடியரசுமீது படையெடுப்பை நடாத்தின. மொறேக்கோ தனது நாட்டுடன் இணைந்த மேற்குசகாராவின் 2/3 பகுதியை (178.000 ச.கி.மீற்றர்) கைப்பற்றியது. அப்பிரதேச[illegible] பழைய ஸ்பானிய தளங்களைத் தன்வசமாக்கிக்கொண்ட மொறேக்கோ றோயல் இராணுவம் அங்கிருந்துகொண்டு மேற்குசகாராவிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதேபோல மொரிட்டானியாவும், மேற்குசகாராவின் தென்பிரதேசத்தை ஆக்கிரமித்து அங்குள்ள பழைய ஸ்பானிய தளங்களைத் தன்வசமாக்கிக்கொண்டது. மேற்கு சகாராவின் 1/3 பகுதியை (100,000 ச.கி.மீற்றர்) மொரிட்டானியா தனது நாட்டுடன் இணைத்தது. சட்டவிரோதமான இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைக்கு எதிராக திரண்டெழுந்த சகாரன் ஜனநாயகக்குடியரசு மீதும், சகாரன் மக்கள் மீதும் புதிய ஆக்கிரமிப்பாளர்கள் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். குறிப்பாக மொறேக்கோவின் மோசமான நடவடிக்கைகளால் சகாரன் மக்களில் பெருந்தொகையானோர் கொல்லப்பட்டதுடன், ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை விட்டு வெளியேறி பாலைவனங்களில் புகலிடம் தேடினர். மொறேக்கோவின் விமான, இராணுவத் தாக்குதல்களிலிருந்து தம்மை காப்பாற்றிக்கொள்வதற்காக மேற்கு சகாராவின் முக்கிய நகரங்களான எல்அயுன் (EL AYOUN) சமாரா (SAMARA) போன்ற இடங்களிலிருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக வெளியேறி அல்ஜீரியாவின் எல்லையோரமாக அமைந்திருந்த நகரங்களில் தஞ்சமடைந்தனர். எல் அயுனிலிருந்த சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசின் தலைமையகம் ஆக்கிரமிக்கப்படாத பிரதேசத்திற்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது.

சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசின் செயற்பாடுகள் வலுவிழந்தன. எனினும் மேற்கு சகாரா ஆக்கிரமிக்கப்பட்டதற்கு கடும் கண்டனத்தை தெரிவித்த அல்ஜீரியா, பொலிசாறியோ முன்னணிக்கு தனது ஆதரவை வழங்கியது. பொலிசாறியோ முன்னணியின் இராணுவ அமைப்பான சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்திற்கு (SAHARAN PEOPLE'S LIBERATION ARMY) தளம், ஆயுதம், பயிற்சி, உணவு, எரிபொருள் போன்ற உதவிகளை அல்ஜீரியா வழங்கியது. இக்காலகட்டத்தில் சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்தில் 20,000 இற்கு மேற்பட்ட வீரர்கள் இருந்தனர்.

### பொலிசாரியோவின் தாக்குதல்

சகாரன் மக்கள் பாலைவனங்களிலும், அகதிகள் முகாம்களிலும் வாழவேண்டிய கடினநிலை ஏற்பட்டபோதிலும் புதிய ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான தமது விடுதலைப் போரிலிருந்து பின்வாங்கிவிடவில்லை. பதி[illegible]கள் மத்தியில் சுதந்திர உணர்வு அதிகரித்தது. 1976 ஜூன் 9ம் திகதி பொலிசாறியோவின் கெரில்லா அணியொன்று மொரிட்டானியாவின் தலைநகருக்குள் ஊடுருவி ஜனாதிபதி மாளிகை மீது பலமான தாக்குதலொன்றை மேற்கொண்டது. மேலும் தொடர்ச்சியாக பல இடங்களில் மொரிட்டானிய இராணுவத்திற்கு எதிராக கெரில்லாத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. கெரில்லாக்களால் ஏராளமான நாசவேலைகள் செய்யப்பட்டன. இந்நடவடிக்கைகளால் மொரிட்டானியாவில் பொருளாதார நெருக்கடிகள் ஏற்பட்டதுடன், மொரிட்டானியா அரசும் ஆட்டங்காணத் தொடங்கியது. 1979 இல் மொரிட்டானியா அதிபர் மொக்தார் உல்ட்டட்டாவின் (MOKTAR OULD DADDAH) ஆட்சி புரட்சிவாதிகளால் கவிழ்க்கப்பட்டு புதிய நிர்வாகம் மொரிட்டானிய ஆட்சிப்பொறுப்பை ஏற்றது. இப்புதிய நிர்வாகமும், பொலிசாரியோ முன்னணியும் செய்துகொண்ட ஓர் சமாதான உடன்பாட்டையடுத்து மேற்குசகாராவில் ஆக்கிரமித்த பிரதேசத்திலிருந்து மொரிட்டானியா வெளியேறியது. இதேநேரம் 1979இல் நடைபெற்ற 34வது ஐக்கியநாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் சகாரா மக்களின் சுயநிர்ணய உரிமையும், சுதந்திரமும் அவர்களின் மறுக்க முடியாத உரிமையென உறுதிப்படுத்தப்பட்டது.

### மொறேக்கோவுடன் போராட்டம்

மொரிட்டானியா தனது ஆக்கிரமிப்பை கைவிட்டபோதிலும் மொறேக்கோ தனது ஆக்கிரமிப்பு நடவடிக்கையை கைவிடவில்லை. இதற்கு பிரதான காரணம், மேற்குசகாராவின் வளம்மிக்க பிரதேசங்கள் மொறேக்கோவின் ஆக்கிரமிப்புப்பகுதிக்குள் இருந்தமையே. மொரிட்டானியாவின் விலகல் பொலிசாறியோவின் போராட்டம் மொறேக்கோவிற்கு எதிராக ஒருமுகப்படுத்தப்படுவதற்கு சாதகமாக அமைந்தது. பொலிசாறியோ கெரில்லாக்களின் பெரும்பகுதியான நடவடிக்கைகள் நாசவேலைகளாகவே (SABOTAGE) இருந்தன. எனினும் குறிப்பிடக்கூடியளவு மொறேக்கோத்துருப்புக்கள் பொலிசாறியோ கெரில்லாக்களின் தாக்குதலுக்குள்ளாகினர். இக்காரணங்களால் மொறேக்கோவுக்கு பெரும் லாபத்தை ஈட்டிக்கொடுத்த பொஸ்பேற் உற்பத்தி (இது மேற்குசகாராவிலிருந்தே உற்பத்தியாக்கப்படுகிறது), படுமோசமாக வீழ்ச்சியடைந்தது இவ்வீழ்ச்சியை சரிப்படுத்தவும், பொலிசாறியோவின் கெரில்லாத் தாக்குதல்களை முறியடிக்கவும், புதிய முயற்சியில் மொறேக்கோ இறங்கியது. இப்புதிய முயற்சியாக ஆக்கிரமிக்கப்பட்ட, வளம்மிக்க

www.eelamview.com

www.eelamview.com



# ந்தலைப் போராட்டம்



4.



5.



6.



2.

1. 1975ம் ஆண்டு ஹசன் நடத்திய 'கிறீன் மார்ச்'
2. 6. பொலிசாரியோ பெண் கெரில்லாக்கள்
3. மொரோக்கோவின் பிரங்கிகள்.
4. ஹசன் (முன்னணியில்)
5. பொலிசாரியோ கெரில்லாக்கள் மொரோக்கா துருப்புகளை கண்காணிக்கின்றனர்

பிரதேசங்களைச் சுற்றி பெரும் மதில்கள் மண் அணைகளால் அமைக்கப்பட்டன.

1978 இல் ஆரம்பிக்கப்பட்ட மதில் அமைக்கும் வேலை 5 கட்டங்களாக 1985 வரை தொடர்ந்தது. மொத்தம் 25,000 கி.மீ நீளத்திற்கு மதில்கள் அமைக்கப்பட்டன. சுமார் 25 அடி உயரம்கொண்ட இந்த மதிலின் ஒவ்வொரு 5 கி.மீ. தூரத்திற்கும், சக்திவாய்ந்த இயந்திரத்துப்பாக்கிகள் பொருத் தப்பட்டன. மதிலின் அருகிலுள்ள பிர தேசங்களில் தரைக்கண்ணிகள் புதைக்கப்பட் டன. 60 கி.மீற்றர் தூரத்திலேயே வரும் எதிரியை கண்டுபிடித்துவிடக்கூடிய மின் னியக்க உபகரணங்கள் இம்மதில்களில் பொருத்தப்பட்டன. 1 இலட்சம் மொரோக் கோப்படை வீரர்கள் மதில் ஓரப்பகுதிகளில் காவலில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மொரோக்கோ இம்மாதிரியான மதில் கட்டும் தந்திரத்தின் மூலம் மேற்குசகாராப் பிராந்தி யத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டது. எனினும் 1981ம் ஆண்டு அக் டோபர் மாதம் கெல்ற்ரு ஷெம்மூர் (GUELTA ZEMMUR) என்ற இடத்தில் மொரோக்கோ இராணுவத்திற்கும் பொலிசாறியோ முன்ன ணிக்கும் இடையில் இடம்பெற்ற சண்டையில் அதிநவீன இராணுவ தளவாடங்களையும், தந்திரோபாய வசதிகளையும் கொண்ட மொரோக்கோ இராணுவத்திற்கு பலத்த அடிகொடுக்கப்பட்டதுடன், ஒருவார காலத் திற்குள் மட்டும் மொரோக்கோவின் 4 விமா னங்களும் ஒரு ஹெலிக்கப்டரும் சுட்டுவீழ்த்தப் பட்டன.

## ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் OAU

மொரோக்கோவுடனான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டு, அதேவேளை அரசியல் ரீதியாகவும் தன்னை வளர்த்துக்கொண்டது. பொலிசாறியோவின் அரசியல் ரீதியான செயல்பாடுகள் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசை ஏராளமான உலகநாடுகள், குறிப் பாக ஆபிரிக்க நாடுகள் அங்கீகரிக்கும்படி செய்ததுடன், ஆபிரிக்காவின் சக்திவாய்ந்த அமைப்பான ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தா பனத்தை (ORGANIZATION OF AFRICAN UNITY) மேற்குசகாரா பிரச்சினையில் தீவிரமாக தலையிடவேண்டிய கட்டாயநிலைக்கு உள் ளாக்கியது. ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் அங்கம்வகித்த 50 நாடுகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசை அங்கீகரித்ததுடன் அதற்கு ஆதர வாகக் குரலும் கொடுத்தன. அத்துடன் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு தன்னையும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் அங்கத் தவராக இணைக்கவேண்டுமென்று ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தை நெருக்கிக்கொண் டிருந்தது. சகாரன் அரபு ஜனநாயகக்குடியர சின் இந்தக்கோரிக்கையை ஆபிரிக்க ஒற் றுமை ஸ்தாபனத்தால் தட்டிக்கழிக்க முடிய வில்லை. 1976ம் ஆண்டு சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு ஆரம்பிக்கப்பட்டதி லிருந்து ஒரு சமாதான முடிவிற்காக ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் பலமுறை முயன்றும் அம்முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. மீண்டும் 1981ல் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தா பனத்தின் வருடாந்த மகாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இத்தீர் மானத்தில் மொரோக்கோவும், பொலிசாறி யோவும் போர்நிறுத்தத்திற்கு உடன்பட வேண்டும் என்றும், சகாரன் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கும், சுதந்திரத்திற்குமான ஓர் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. ஆனால் மொரோக்கோ மன்னர் இரண்டாம் ஹசன் பொலிசாறியோவுடனான எந்தவித பேச்சுவார்த்தைக்கும் உடன்படவில்லை.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து 1982ம் ஆண்டு மாசி மாதம் எத்தியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆபிரிக்க வெளியுறவு மந்திரிகளின் கூட்டத் தில் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தின் 51வது உறுப்பு நாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசிற்கு ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனத்தில் அங்கத்து வம் வழங்கக்கூடாது என வாதிட்டுவந்த மொரோக்கோ இந்நடவடிக்கையை வன்மை யாகக் கண்டித்ததுடன் கூட்டத்தொடரில் இருந்தும் வெளியேறியது. மொரோக்கோ விற்கு ஆதரவாக சயிர்நாடும் வெளியேறியது.

எனினும் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் சமாதானத் தீர்வுக்கான தனது முயற்சியை தொடர்ந்தது. 1983 ஜூனில் முன்னர் வைத்த கோரிக்கையை மீண்டும் இரு நாடுகளுக்கு மிடையே வைத்தது. ஆனால் மொரோக்கோ சகாரன் மக்களுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பேச்சுவார்த்தை மேற் கொள்ள மறுத்தது.

## உலக நாடுகளின் அங்கீகாரம்

1976 பெப்ரவரி 27 இல் சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு நிறு[illegible] இருந்து உலகநாடுகள் சகாரன் அரபு ஜனநா யகக்குடியரசை அங்கீகரிக்கத் தொடங்கின. 1976ம் ஆண்டிலேயே அல்ஜீரியா, அங் கோலா, மொசாம்பிக் உட்பட 10 நாடுகள் அங்கீகாரம் வழங்கின. 1986ம் ஆண்டுவரை யான காலகட்டத்தில் மொத்தம் 63 நாடுகள் சகாரன் அரபுக்குடியரசிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளன. கடைசியாக அங்கீகாரம் வழங்கிய நாடு இந்தியாவாகும். சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசிற்கு அங்கீகாரம் வழங்கியதன் மூலம் இந்தியா மொரோக் காவுடனான இராஜதந்திரத் தொடர்பை இழந்தமை குறிப்பிடத் தக்கதாகும். இவ்வாறு அங்கீகாரம் வழங்கிய நாடுகளில் அரை வாசிக்கு மேற்பட்டவை ஆபிரிக்கநாடுகளா கும். இதற்கு அடுத்தபடியாக 15 ற்கு மேற்பட்டவைத்தின் அமெரிக்க நாடுகள் அங்கீ காரம் வழங்கியுள்ளன. இவையெல்லாம் மூன்றும் உலகநாடுகளாகும். உலகநாடுகளின் அங்கீகாரம் அரசியல் இராஜதந்திர ரீதியில் சகாரன் அரபு ஜனநாயகக் குடியரசு பெற் றுள்ள வளர்ச்சிக்கு சான்றாகும்.

## நிர்வாக அமைப்பு

சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசு ஒரு சாதாரண அரசு அல்ல. அகதிகள் முகாம் களிலேயே காலம்முழுவதும் வாழ்ந்து கொண்டு, மிகவும் கஷ்டமான நிலைமை களுக்கு மத்தியில் விடுதலைப்போரை நடத் திக்கொண்டிருக்கும் சகாரன் மக்களால் கட் டியெழுப்பப்படும் ஓர் அரசாகும். $\frac{9}{10}$ பகு தியை இந்த அரசாங்கம் நிர்வகிக்கின்றது. சகாரன் அரபு ஜனநாயகக்குடியரசில் அடி மட்டத் தலைமை முதல் உயர்மட்டத்தலைமை வரை எல்லாவற்றிற்கும் தேர்தல் நடத்தப் படுகின்றது. சகாரன் அரபு ஜனநாயகக்குடி யரசின் சட்டம் இயற்றும் அதிகாரம் சகாரன் தேசியசபைப் பிரதிநிதிகளிடம் இருக்கிறது. இத்தேசியசபை மக்கள் பொதுக் காங்கிரசால் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கு தேர்வுசெய்யப்படுகிறது. (இம்மக்கள் பொதுக் காங்கிரஸ் பிரதிநிதிகள், அடிமட்ட மக்கள் காங்கிரஸ் பிரதிநிதிகளால் தெரிவுசெய்யப் படுகின்றனர்.) தேசியசபை ஆலோசனை வழங்கும் சபையாகவே விளங்குகிறது.

பூரண ஆட்சியதிகாரம் மந்திரிகள் சபை யின் கையிலேயே தங்கியுள்ளது. இம்மந் திரிசபை புரட்சிகர ஆட்சி சபையால் நிய மிக்கப்படுகிறது. புரட்சிகர ஆட்சிசபை என்னும் போது பொலிசாறியோ முன்னணி யின் நிர்வாகக்குழுவையே குறிக்கிறது. நிர் வாகக்குழுவில் 7 பேர் அங்கம்வகிக்கிறார்கள். புரட்சிகர ஆட்சிசபையின் தலைவர் பொலி சாறியோ முன்னணியின் நிர்வாகக்குழுவின் செயலாளர் நாயகமாகவும், குடியரசின் தலைவராகவும் விளங்குகிறார்.

நிர்வாகக்குழுவின் செயலாளர்நாயகமாக வும் குடியரசின் தலைவராகவும் முகமட் அப் டெல் அஸீஸ் இன்று இருக்கிறார். நிர்வாகக் குழுவின் மற்றொரு உறுப்பினராக இருக்கும் மக்பூட் அலி பெய்பா சகாரன் அரபுக்குடி யரசின் பிரதமராகவும் கல்வி கலாச்சார அமைச்சராகவும் இருக்கின்றார். மேலும் பாதுகாப்பு, உள்நாட்டு, வெளிநாட்டு விவ காரம், நீதித்துறை, வர்த்தகத்துறை போன்ற வற்றுக்கும் அமைச்சர்கள் இருக்கின்றார்கள். சகாரன் அரசாங்கத்தால் மக்களுக்கு வேண் டிய அத்தியாவசிய தேவைகளெல்லாம் நிறைவேற்றிக்கொடுக்கப்படுகின்றது. சகல பிள்ளைகளுக்கும் கல்வி வசதி வழங்கப்படு கிறது. இவைகளைவிட பலமான ஒரு மக்கள் இராணுவத்தைக்கட்டி எழுப்பவேண்டிய அவசியமும் சகாரன் அரபு ஜனநாயகக்குடி [illegible] இருக்கிறது.

மேற்குசகாராவின் $\frac{1}{10}$ பகுதியில் கிட் டத்தட்ட 20,000 ச.கி.மீற்றர் பிரதேசத் திலேயே தமது பூரணகட்டுப்பாட்டை கொண்டிருக்கும் மொரோக்கோ, அங்கு தன் னைப் பல்வேறு வழிகளிலும் பலப்படுத்திக் கொண்டே வருகிறது. சகாராவின் முக்கிய கனிவளப்பிரதேசங்களான டக்லா துறைமுகப் பிரதேசம், எல்அயுன் துறைமுகப்பிரதேசம், சமாரா, அம்காலா, ஜிடிரியா போன்ற பகுதிகளும் மொரோக்கோவின் கட்டுப்பாட் டுப்பிரதேசத்திற்குள்ளேயே அமைகின்றன. இப்பிரதேசங்களைச்சுற்றியே பாதுகாப்பு மதில் களும் அமைக்கப்பட்டுள்ளன. முக்கிய மாக இம் மதில்களின் உதவியுடனேயே மொரோக்கோ சுரண்டல்களையும், அடக்கு முறைகளையும் மேற்கொண்டுவருகிறது. மேலும் மொரோக்கோவின் இந்நடவடிக்கை களுக்குப் பின்னணியாக ஏகாதிபத்திய அமெரிக்கா உள்ளது. நீண்டகாலமாக சகா ராப் பிரச்சினையில் அமெரிக்கா நடுநிலைமை வகித்துவந்தது. ஆனால் அமெரிக்காவில் கார்ட்டர் நிர்வாகம் தோற்கடிக்கப்பட்டு ரீகனின் நிர்வாகம் ஆட்சிக்குவந்ததைத் தொடர்ந்து அமெரிக்காவின் வெளிநாட்டுக் கொள்கைகள் மாற்றமடைய ஆரம்பித்தது. 1981 அக்டோபரில் கெல்ற்ரு ஷெம்மூர் (GUELTA ZEMMUR) பிரதேசத்தில் இடம் பெற்ற சண்டையில் மொரோக்கோத் துருப் புக்கள் தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து அமெரிக்கா மொரோக்கோவிற்கு சாதகமாக மாறியது.

அமெரிக்காவின் இராணுவத் தலைமையக மான "பென்டகனில்" உயர்மட்டத்தில் ஓர் இராணுவசபை அமைக்கப்பட்டது. இச்சபை யின் நோக்கம் மொரோக்கோவின் அவசர அழைப்பிற்கு உதவிசெய்வதும், சகாராப்பிர தேசங்களுக்கு சென்று அங்குள்ள மொரோக்க இராணுவ தளங்களின் தேவைகளை அறிந்து செயல்படுதலும் ஆகும். மேலும் மேற்குசகா ராவின் முக்கிய நகரங்களில் அமெரிக்க ஆலோசகர்களின் செயற்பாட்டிற்கும் வழி வகுக்கப்பட்டது. அத்துடன் விடுதலை இராணு வத்தினரின் நடமாட்டங்களை கண்காணிப் பதற்கு நவீன மின் உபகரணங்களும், உளவு செய்மதிகளின் உதவிகளும் வழங்கப்பட்டன. பாலைவனப்பிரதேசத்திலுள்ள சகாரன் மக்கள் விடுதலை இராணுவத்தை அழிப்பதற்காக அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட கிளஸ்டர் வகைக்குண்டுகளும், (CLUSTER BOMBS) மொரோக்கோவிற்கு வழங்கப்பட்டன. இவை களுடன் அமெரிக்கா மொரோக்கோவிற்கு பெருமளவு நிதியுதவியும், பொருளாதார உதவியும் அளித்துவருகிறது. இவற்றைத்தவிர பிரான்சும் பெருமளவு பொருளாதார, இரா ணுவ உதவிகளை மொரோக்கோவிற்கு வழங்கு கிறது. குறிப்பாக பெருந்தொகை நவீன ஆயுதங்களும் மிராஜ் போன்ற போர் விமா னங்களும் இவற்றுள் அடங்கும்.


மாட்ரிட் உடன்படிக்கைக்கு பின்னர் பல ஆண்டுகளாக பொலிசாறியோ முன்னணிக்கு லிபியா ஆயுத உதவி வழங்கிவந்தபோதும், 1984ம் ஆண்டு மொரோக்கோவுடன் ஒப்பந் தம் ஒன்றைச் செய்தபின், தனது உதவிகளை கடாபி நிறுத்தினார் அண்மையில் இஸ்ரேல் பிரதமர் ஷிமன்பெரஸ் மொரோக்கோ சென் றதைத் தொடர்ந்து லிபியா மொரோக்கோ உறவு சீர்குலைந்துள்ளது.

## வெற்றிப்பாதையில்

வல்லரசுகளின் உதவியுடன் மேற்கு சகா ராவை மொரோக்கோ ஆக்கிரமித்து சுரண் டியபோதும் சகாரா மக்கள் தளர்ந்துவிட வில்லை. அவ்வப்போது மொரோக்கோ இரா ணுவத்தின் மீது பலத்த தாக்குதல்களை தொடுத்துவரும் சகாரன் மக்கள் இராணு வத்தின் விடுதலைப் போராட்டப் பலத்தை எதிர்கொள்ளமுடியாது மொரோக்கோத் துருப்புக்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கின் றன. நிரந்தரமான சமரசத்தீர்வைக்கான முயன்றுகொண்டிருக்கின்ற ஐக்கியநாடுகள் சபை, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் என்ப வற்றுடன் ஒத்துழைத்து வரும் சகாரன் மக்கள் மறுபக்கம் தமது ஆயுத நடவடிக்கை களையும் தீவிரப்படுத்தி வருகிறார்கள். மிகவும் பலம்வாய்ந்த பாதுகாப்பு மதில்களின் பெரும் பகுதிகளை பல சந்தர்ப்பங்களில் சகாரன் மக்கள் விடுதலை இராணுவம் தகர்த்துள்ளது. சகாரன் மக்களின் 10 வருடகால போராட்டம் அவர்களுக்கு பாரிய அனுபவங்களை வழங்கி யுள்ளது. தமது போராட்டத்தை சாதாரண வேகத்துடன், ஆனால் நீர்க்கமான, உறுதி யுடன் முன்னெடுத்துக்கொண்டிருக்கின்ற சகாரன் மக்களை மொரோக்கோ மன்னர் இரண்டாம் ஹசன் எதுவும் செய்துவிடமுடி யாது. சகாரன் மக்கள் விடுதலை இராணுவம் எவராலும் அழிக்கமுடியாத ஒன்றாக நிலைத்து விட்டது. சகாரன் மக்களின் பூரணவெற்றி வெகுதூரத்தில் இல்லை.

www.eelamview.com

www.eelamview.com



மேஜர் அருணா உடனிருப்பவர்
லெப். சேனக விக்கி.

## யுத்தக் கைதிகளின் பரிமாற்றம்

19.12.86. அன்று யாழ்ப்பாணத்தில் யுத்தக் கைதிகளின் பரிமாற்றம் இடம் பெற்றது. காலை 8 மணி அளவில் பலாலி இராணுவ முகாமுக்கு முன்பாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி, பாதுகாப்பு அமைச்சின் செய லாளர் சேபால அட்டிகல முப்படைகளின் தளபதி சிறில் ரணதுங்க ஆகியோர் நின்று விடுதலைப்புலிகளாகிய செல்வக் குமார், காமினி ஆகியோரை விடுதலை செய்தனர். யாழ்ப்பாணத்தில் இராணுவச் சுற்றி வளைப்பின் போது 18.7.84-ம் திகதி கைது செய்யப்பட்டு இரண்டு வருடங் களுக்கு மேல் நீதி விசாரணையின்றி சிறை வாழ்வின் கொடூரங்களை அனுபவித்தவர் காமினி எனப்படும் பேவியன் அனக்ஸ் ரஸ். செல்வக்குமார் என அழைக்கப்பட் டவர் கடலில் மாண்டு போனதாக கருதப் பட்டு கல்லறையிலிருந்து மீண்டு வந்த வர் போல் விடுதலை பெற்று வந்த மேஜர் அருணாவாகும். 27.4.86 அன்று அருணா சென்ற படகு சிறிலங்கா கடற் படையினரால் தாக்கப்பட்டு தீப்பற்றி எரிந் தது. சக போராளிகள் 11 பேரும் அச்சண்டையில் வீரமரணம் அடைய, அருணா உடலில் பட்ட நீக்காயங்களுடன் உயிர் தப்பினார். கைது செய்து அவரை யாழ்கோட்டை முகாமில் வைத்திருக்கும் போது இராணுவத்தினர் அவரது காலை துப்பாக்கியால் சுட்டு ஒடித்துவிட்டு தப்பி ஓடும்போது சுட்டதாக அறிவித்தனர். பின்னர் வெலிக்கடை சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். படகோட்டி செல்வக் குமார் என்று தன்னை அறிமுகப்படுத்திய மேஜர் அருணாவை சிறிலங்காவின் உளவுப் பிரிவினர் கூட அடையாளம் காணவில்லை.

அருணா இறந்துவிட்டதாகக் கருதிய விடுதலைப்புலிகளும், தமிழீழ மக்களும் சோகத்துள் ஆழ்ந்தனர். இறுதிக் கிரியை களும் நடந்தன. ஹர்த்தால் அனுட்டித்து வீர அஞ்சலி செலுத்திய பொதுமக்களை டெலோ இயக்கத்தினர் தாக்கியபோது அது விடுதலைப்புலிகள் — டெலோ மோதலுக்கும், டெலோவின் அழிவிற்கும் வழிவகுத்தது. பின்னர் அருணாவின் இருப்பை அறிந்த விடுதலைப்புலிகள் அவ் விடயத்தை மிகவும் இரகசியமாகப் பேணி னர்.

மன்னார் மாவட்டத்திலுள்ள அடம்ப னில் நடைபெற்ற சண்டையின்போது விடுதலைப்புலிகளால் கைது செய்யப் பட்ட சிறிலங்கா இராணுவத்தினரான 2-வது லெப்டினன்ட் அஜித் சந்திர சிறி, கோப்ரல் கே. டபிள்யூ. பண்டார ஆகியோர் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர். இவ்விரு இராணுவத்தினரை விடுதலை செய்வதற்கான நிபந்தனைகளை விதித்த போது, அருணாவை விடுவிக்கவேண்டும் என்ற திட்டத்தோடு யாழ் பிராந்திய தளபதி கிட்டு செயல்பட்டார். சிறிலங்கா அரசு கைதாகியிருக்கும் விடுதலைப்புலிக ளின் பெயர்ப்பட்டியலைத் தரவேண்டும் என்றும் அதில் தாம் தெரிவு செய்யும் 10 பேரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரவேண்டும் என்றும் கடைசி நேரத்தில் விடுவிக்கவேண்டிய இருவரின் பெயர் களைத் தாம் கூறுவதாகவும், விடுவிக்கப் பட்டோரை அடையாளங்கண்ட பின்பே இராணுவத்தினரை விடுதலை செய்ய முடி யும் என்றும் நிபந்தனை விதித்தார். இவ் வாறே கைதிகள் பரிமாற்றம் நடைபெற்றது. பலாலியில் அருணாவும், காமினியும் விடு தலை செய்யப்பட்ட சில நிமிடங்களில் இரு இராணுவத்தினரையும் விடுதலைப்புலிகள் யாழ் கோட்டை வாயிலில் காப்டன் கொத்தலாவலையிடம் கையளித்தனர். அருணா, அரசால் தடைசெய்யப்பட்ட இயக்கத்தின் தளபதி என அறிந்திராத அதுலத் முதலி கைதிகள் பரிமாற்றத் தின் பின் பத்திரிகைகளுக்குப் பதிலளிக் கையில், குஞ்சு குமார் (அருணா) மீது எவ்வித குற்றச்சாட்டுகளும் இல்லையென சட்ட மாஅதிபர் பரிந்துரைத்ததாகவும், காமினி தனக்குரிய தண்டனையை 2 வருடம் சிறையிலிருந்து அனுபவித்துவிட்டதாக வும் கூறி மூக்குடைபட்டுக் கொண்டார்.

விடுதலைப்புலிகளால் 12.10.86 அன்று கைது செய்யப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் இருவரும் ஜெனிவா உடன்படிக்கையின் ஷரத்துகளுக்கமைய சரணடைந்த யுத்தக்கைதிகளாக நன்கு பராமரிக்கப்பட்டனர். போர்வீரர்கள் என்ற அந்தஸ்தால் ஏற்பட்ட மரியாதையுடன் புரட்சிவாதிகளுக்குரித்தான மனிதநேயத் துடன் நடத்தப்பட்டனர். எனவேதான் கே.டபிள்யூ. பண்டார யாழ்ப்பாணம் வந்த தனது உறவினரிடம் கூறினார்.

"இராணுவத்தில் இருந்தபோது நாம் கைதிகளாக இருந்தோம். இப்போதுதான் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக் கிறோம்."

1985-ம் ஆண்டு ஏப்ரல், மே மாதங் களில் விடுதலைப்புலிகள் நடத்திய யாழ், மன்னார் பொலிஸ் நிலையத் தாக்குதல் களின்போது கைதான 4 பொலிஸ்காரர் களையும், 1986 ஆகஸ்ட் மாதம் இராணு

# கானகத்தில்



திருகோணமலைக்கருகே மேன்காமம் என்ற கிராமம். 2.6.85. அன்று, சூரியன் மெல்ல உதித்தான். எப்போதும் போல் ஓர் அழகான காலைப்பொழுது... மக்கள் வழமையான வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினார்கள். ஒவ்வொரு காலையும் போலவே, அன்றும் அந்தக் கிராம மக்களின் முகங்களில்தான் எத்தனை மகிழ்ச்சி... ஆனால்...




என்ன கொடுமை! சிங்க இராணுவ வெறியர்கள் திடீரென்று எங்கிருந்து வந்தார்கள்? பாவிகள்! ஐயோ! எங்கள் அழகான கிராமம் எரிகிறதே! இராணுவ ஓநாய்களின் துப்பாக்கிகள் நெருப்பை உமிழ்ந்து உறுமின...



இந்த நாள் கொடுமையானது! சிங்கள கமாண்டோ வெறியர்களும்—ஊர்காவல் படையும் புரிந்த மிருக வெறியாட்டம்! கணவன்மார் முன்னாலேயே பெண்களையெல்லாம் தெருவில் இழுத்து...



அண்ணை, அண்ணை... உடனே கிளம்புங்கண்ணை.. நம்மட பொம்புளைகள் நாப்பது 'பேர மேன்காமத்துல இருந்து 'ஆமிக்' காறனுகள் புடிச்சி தெஹிவித்தைக்கு கொண்டு பொயிட்டானுக.. என்ன நடக்குமோ?...!' மூதூர் விடுதலைப் புலிகள் தளபதி மேஜர் கணேசை விடுதலைப்புலிகள் முகாமில் சந்தித்து விம்மினான் முஸ்லீம் இளைஞன்...



அடுத்த கணத்திலே மோட்டார் சைக்கிள் வண்டிகள் காற்றாய்ப் பறந்தன... மேஜர் கணேஸ்— அந்த மாவீரன் தலைமையில் மீண்டும் புலிகளின் பாய்ச்சல்—தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இன்னொரு அத்தியாயம்—



புலிகளின் துப்பாக்கிகள் முழங்கின—தெஹிவத்த சிங்களர் குடியேற்றக் கிராமம் நொறுங்கிற்று—புலி களின் பாய்ச்சலை எதிர்பார்க்காத வெறியர்கள் பிணங்களாய்ச் சுருண்டார்கள்...

www.eelamview.com

www.eelamview.com



வக்கை விட்டு ஓடிச் சரணடைந்த 2 இராணுவத்தினரையும் விடுதலைப்புலிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்தனர். ஆயினும் 3000-கு மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களும், 19 விடுதலைப்புலிகளும் சிறைகளில் வாடுகின்ற காரணத்தால் இவ்விரு கைதிகளுக்குப் பதிலாகஇரு விடுதலைப்புலி வீரர்களையாவது விடுவிக்கக் கோருவது என்பது தீர்மானமாயிற்று.

யுத்தக்கைதிகள் பரிமாறறம் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக நல்லெண்ண விஜயமாக சிறிலங்கா மக்கள் கட்சித் தலைவர் விஜே குமாரண துங்காவும், அவரது பரிவாரமும் பத்திரிகையாளர்களும் 20.10.86, 5.12.86 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் வந்தனர். தமிழர் பகுதிகள் விடுவிக்கப்பட்டு புலிகளின் கட்டுப்பாட்டுள் உள்ள உண்மை நிலையை சிங்கள மக்களுக்குத் தெரிவித்து இரு தேசிய இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வையும், நல்லெண்ணத்தையும் வளர்ப்பதற்கு இவ்விஜயங்கள் உதவின. யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் சிங்களத் தலைவர்கள் தென்னிலங்கையில் மாபெரும் வீரர்களாக மதிக்கபடுகிறார்கள் என்றும் கதை நிலவியது.

விஜய குமாரண துங்காவின் முதல் வருகையின் பின்பே அஜித் சந்திர சிறி இறக்கவில்லை, உயிருடன் விடுதலைப்புலிகளிடம் கைதியாக இருக்கிறார் என்ற உண்மையை அவரது பெற்றோர் அறிந்தனர். அடம்பனில் இறந்த இராணுவ வீரர்களின் உடல்கள் யாழ்கோட்டை இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட போது, அவற்றில் ஒன்றை சவப்பெட்டிக்குள் அடைத்து சில வைத்து அஜித் சந்திர சிறியின் உடலெனக் கூறி அவரது பெற்றோரிடம் சிறிலங்கா அரசு கையளித்தது. விஜய குமாரண துங்கா கைதிகளின் படங்களை பத்திரிகையிலும், தொலைக்காட்சியிலும் வெளியிட்டபோது அவரது பெற்றோர் மகிழ்ச்சியால் திக்குமுக்காடிப் போயினர். இச்சம்பவத்தால் வெறுப்படைந்த விஜய குமாரண துங்க, "தனது போர்வீரர்களை அடையாளங் காணமுடியாத அரசு எவ்வாறு ஒரு யுத்தத்தை நடத்த முடியும்?" என்று கேட்டார். 2-ஆம் முறை அவர் வந்தபோது 30 புத்த பிக்குகளும், கைதிகளின் உறவினர்களுமாக 125 பேர் கொண்ட குழு ஒன்று வந்தது. உறவினர்கள் கைதிகளை சந்தித்து, அவர்கள் நன்கு பராமரிக்கப் படுவதைக் கண்டு மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்ததோடு, அவர்களில் ஒருவர், "உங்கள் போராட்டம் நியாயமானதே. இங்குள்ள நிலைமைகளை அங்குள்ள மக்களுக்குக் கூறுவேன்" என்று சொல்லிச் சென்றார்.

9.11.86 அன்று யாழ்கோட்டை இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி கேணல் ஆனந்த வீரசேகர, மேஜர் ஆரியரட்ன, கேப்டன் கொத்தலாவலை ஆகியோர் இது தொடர்பாக கிட்டுவைச் சந்தித்துப் பேசினர். கிட்டு விதித்த 3 நிபந்தனைகளையும ஏற்று கைதிகள் பரிமாற்றத்துக்கு சம்மதித்துச் சென்றனர். ஆயினும், தமிழ்நாட்டில் ஆயுதப் பறிப்பு நடைபெற்று விடுதலைப் போராட்டத் தலைவர்களுக்கும், போராளிகளுக்கும் எதிராக பொலிஸார் நடவடிக்கை எடுத்ததைத் தொடாந்து கைதிகள் பரிமாற்றம் தடைபட்டது. "இராணுவ நடவடிக்கை மூலம் மீட்போம்" என்று அத்துலத் முதலி கூறியது போல் யாழ்குடாநாட்டில் முப்படைகளின் தாக்குதல்கள் இடம்பெற்றன. 11.11.86——ல் தொடங்கி இரண்டு நாட்கள் இடம்பெற்ற சிறிலங்கா அரசின் தாக்குதல்கள் தோல்வியைத் தழுவின.

"பயங்கரவாதிகளுடன் சமரஸம் கிடையாது" என்று இதுவரை கூறிவந்த அரசாங்கம் விடுதலைப்புலிகளின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து கைதிகள் பரிமாற்றம் செய்துகொண்டது. கிட்டு கூறியது போல் "விடுதலைப்புலிகளுக்கு ஒரு அரசியல் வெற்றிதான்". தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி,"இரு நாடுகளுக்கிடையில்தான் கைதிகள் பரிமாற்றம் நடைபெறும்" என்று கூறியிருந்தார்.

எனவே இத்தீவில் இருநாடுகள் உண்டென்பதையும், வடபகுதி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறதென்பதையும் சிறிலங்கா அரசு பகிரங்கமாக ஏற்றுக்கொண்டதையே இக்கைதிகள் பரிமாற்றம் காட்டுகிறது. அருணை மீட்கப்பட்டது முதாலாளித்துவ அரசில் மலிந்து கிடக்கும் நிர்வாக சீர்கேட்டை அம்பலப்படுத்தவதோடு, மொசாட்டின் பக்கபலத்துடன் இயங்கும் சிறிலங்கா உளவுத்துறையின் திறமையையும் சந்தேகப்பட வைத்துள்ளது. அதே வேளை விடுதலைப்புலிகளின் அரசியல் மேதாவிலாசத்தை, இராஜதந்திரத்தை உலகம் புகழ வைத்துள்ளதோடு, விடுதலைப்புலிகள் கண்ணியமானவர்கள், யுத்த தர்மம் பேணுபவர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மக்கள் பலமுடைய உண்மையான விடுதலைப் போராளிகள் என்பதையும் உலகம் உணர வைத்துள்ளது இக்கைதிகள் பரிமாற்றம்.


## தமிழீழத்தில் சிங்கள ஆக்கிரமிப்புத் திட்டம்.

மன்னார், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களை சிங்களக் குடியேற்றம் மூலம் கபளீகரம் செய்யும் நாசகாரத் திட்டம் அடங்கிய இரகசிய ஆய்வறிக்கை ஒன்று விடுதலைப் புலிகள் வசம் சிக்கியிருக்கிறது. 'சிங்கள ஆய்வுக் குழு' ஒன்றினால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கை கொழும்பு அரசியல் வட்டாரங்களில் விநியோகமாகி வருகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு பிரதேசமாக இணைக்கும் தமிழரின் கோரிக்கையை ஒருபொழுதும் ஏற்றுக்கொள்ளக் கூடாதென இந்த ஆய்வறிக்கை இலங்கை அரசை வேண்டுக்கொள்வதோடு, வடகிழக்கு பூகோள தொடர்பை துண்டிக்கும் வகையில் திருகோணமலைப் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றத்தை மேலும் தீவிரப் படுத்துமாறு வலியுறுத்துகிறது.

இந்த ஆய்வறிக்கை மேலும் குறிப்பிடுவதாவது: 'இப்பொழுதும் சரி, எதிர்காலத்திலும் சரி வடக்குப் பிரதேசத்தை கிழக்கிலங்கையோடு இணைப்பதற்கு இணங்கக் கூடாது. ஏனென்றால் இலங்கையின் மூன்றில் இரு பகுதி கடலோரப் பிரதேசம் தமிழரின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். திருகோணமலை மாவட்டமும் அங்குள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகமும் சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அத்தியாவசியமாகும். திருகோணமலைப் பிரதேசம் வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் ஒரு பாலமாக அமைகிறது. இப்பிரதேசத்தை சிங்களக் குடியேற்றம் மூலம் ஆக்கிரமிப்புச் செய்து இந்த இணை-இணைப்புப் பாலத்தை உடைத்து விட வேண்டும்.'

'வடக்கும் கிழக்கும் இணைந்ததாக ஒரு சுயாட்சிப் பிரதேசம், தமிழருக்கு வழங்குவதை சிங்களப் பெரும்பான்மை மக்கள் ஒருபொழுதும் விரும்பமாட்டார்கள். மாகாணங்கள் என்ற பூகோள வரம்புகளை அழித்துவிட்டு புதிதாக எல்லைகளை நிர்ணயிப்பது நல்லது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வரைந்துவிட்ட பூகோள எல்லைக் கோடுகளில் இனி அர்த்தமில்லை. குடியேற்றம் மூலம் சனத்தொகையை இடம்பெயரச் செய்வதற்கு முன்னராகவே பூகோள எல்லைகளை நாம் மாற்றியமைக்க வேண்டும். இப்படி எல்லைகளை புதிதாக நிர்ணயித்துவிட்டால் கிழக்கில் தமிழர்கள் சிறுபான்மையினராக வாழ்கிறார்கள் என்பதை நிரூபிப்பதாக முடியும். இது சிங்கள மக்களை மகிழ்ச்சியடையச் செய்யும். இஸ்லாமிய மக்களிடையே தனி ஈழக் கோரிக்கைக்கு எதிர்ப்பைக் கிளப்பும்.'



தற்போதுள்ள ஒன்பது மாகாண அமைப்பை முற்றாக நீக்கிவிட்டு, கீழ்க் கண்டவாறு புதிய எல்லைகளை நிர்ணயிக்குமாறு இந்த ஆய்வறிக்கை அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறியிருக்கிறது.

* சிங்கள மக்களை பெரும்பான்மையினராக உருவாக்கும் நோக்கத்தோடு திருகோணமலை மாவட்டத்தை மேற்குப் புறமாக விஸ்தரிப்புச் செய்தல்.
* பொலநறுவை மாவட்டத்தை கிழக்குப் புறமாக கடல் எல்லைவரை விஸ்தரித்தல்.
* வட மாகாணத்தின் சில பகுதிகளை உள்ளடக்கியதாக புதிய மகாவலி மாவட்டத்தை மாற்றியமைத்தல்.
* கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மன்னார் மாவட்டத்தை அநுராதபுரத்துடன் இணைத்தல்.

(இந்த நாசகாரத் திட்டத்தின் பிரகாரம் புதிய எல்லைகளுடன் வரையப்பட்ட இலங்கை படத்தை இங்கு பிரசுரிக்கிறோம். இதில் மன்னார், திருகோணமலை, அம்பாறை மாவட்டங்கள் சிங்களப் பிரதேசங்களாக மாற்றப்பட்டிருப்பதைக் காணலாம்.)

# ஒரு களம்



மேன்காமம் கிராமம் இரத்தத்தில் தோய்ந்தது. குழந்தையையும் கொன்றுவிடுவார்களோ என்று ஒரு தாய் பிள்ளையைத் தூக்கினள், பதறிக்கொண்டு. ஆனல், அந்தப் பிஞ்சுக் குழந்தையைச் சண்டாளர்கள் பிடுங்கி எறிந்தார்கள்... ஊரெல்லாம் அழுகுரலாய்... கண்ணீர் வெள்ளமாய்...



கைகள் கட்டப்பட்டு 40 தமிழ்ப் பெண்கள் ஊருக்கு வெளியே காட்டுப்பாதையால் அழைத்துச் செல்லப்பட்டார்கள்—எங்கே கொண்டு போகிறார்கள் சண்டாளர்கள்? சிங்கள மிருகத்தனத்தின் தலையில் இடி விழாதா?



தெஹிவத்த சிங்களவர் குடியேற்றக் கிராமத்தில் அந்தப் பெண்கள் சிறைவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற தகவலோடு ஒரு முஸ்லீம் இளைஞன் ஓடினன்... 'கிழக்கு மாகாணத்தில் எம் தமிழ்த் தேசிய இனத்துக்கு உலை வைக்கும் சிங்கள வெறியருக்குப் பாடம் புகட்டுவேன். இரவு வருவதற்கு முன்பே, தமிழ்ச் சகோதரிகள் பிழியப்படுவதற்கு முன்பே...'



வெறிபிடித்த ஓநாய்களின் வாயிலிருந்து—தமிழ்ச் சகோதரிகள் விடுவிக்கப்பட்டார்கள்... மேஜர் கணேஸ் தன் 'சேட்'டைக் கழற்றிக் கொடுத்து—தன்னேடு கூடப்பிறவாத ஒரு தமிழ்ச் சகோதரியின் மானத்தைக் காத்தான். அந்த நாள்.... விடுதலைப்புலிகளின் வீரத்துக்கும்—பண்பாட்டுக்கும் இலக்கணமானது.



'சகோதரிகளே! கவலைப்படாதீர்கள்!—இது எங்கள் கடமை. இந்த மண்ணில்—ஓநாய்கள் நுழைவது இனிமேல் சிரமமாகவே இருக்கும். இனிமேல் நாங்கள் தான் உங்களது காவல் அரண்.'



நாற்பது தமிழ்ப் பெண்களும் மேன்காமம் கிராமத்தில்—உறவினர்களிடம்—விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டார்கள். மரணத்துக்கும் கண்ணீருக்கும் நடுவிலும் சில வேளைகளில் 'முறுவலோடு' ஒரு விடுதலைப் பயணம்...

www.eelamview.com

www.eelamview.com

# வீர வணக்கம்

# மேஜர் கணேஸ்



அவனுடைய சாவு ஓர் இலையின் உதிர்வு அல்ல — ஒரு மலையின் சரிவு ஆகும்.

மேஜர் கணேஸ் — தமிழீழ விடுதலைப் போர் வரலாற்றில் மேனி சிலிர்க்க வைக்கும் ஒரு அத்தியாயம் ஆகிவிட்டான்.

பெருத்த மீசை — தடித்த உதடுகள் — பருத்த மார்பு — களத்தில் வெடித்த எரிமலையாய் உலா வந்தவன் கணேஸ்.

மூதூர் — ஆறுகளால் துண்டு துண்டாகி புவி இயல் நிலையில் ஆங்காங்கே சிதறி கிடக்கும் நிலப்பரப்பு — கொலை வெறிச்சிங்களவரின் குடியேற்றப் பகுதி — இசுலாமியத் தமிழருக்குப் பாதுகாப்பு என்ற பெயரில் அவர்கள் வாழ்வையே சூறையாடும் முஸ்லீம் ஊர்காவல் வெறிப்படையின் இருண்ட கூடாரம் — 9 ராணுவ முகாம்களாலும் 3 அதிரடிக் காவல் நிலையங்களாலும் வளைக்கப்பட்ட தமிழீழத்தின் முள்வேலிப் பகுதி — அங்கேதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தை வித்திட்டு வளர்த்தான் கணேஸ்

1981 ஆம் ஆண்டு தலைவர் பிரபாகரனைச் சந்தித்து — விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தபோது அவனுக்கு வயது இருபதுதான் — ஆனால் அப்போதே அவன் கண்களில் நெருப்பின் அலை பொங்கிற்று. ஒன்றாய்ப் படித்த காலத்தில் ஆசீர் சீலனோடு சேர்ந்து வளர்த்துக்கொண்ட விடுதலை உணர்வுகள் ஆழப் பதிந்திருந்தன.

தளபதி சீலனுக்குப் பக்கத்தில் அவன் ஒரு வீரனாய்க் களத்தில் நின்ற காலம் உண்டு. அந்த நாட்கள் கணேஸின் வாழ்க்கையில் அவன் பாடம் கற்ற நாட்களாகும்.

மீசாலை முற்றுகையில் — தளபதி சீலன் களத்தில் மீளாத்துயில் கொண்ட நிகழ்ச்சி — கணேஸ் நெஞ்சில் மின்னலின் கொடிய வீச்சாயிற்று. தன் இனிய பள்ளிக்கூட நண்பனின் அந்த 'பெரிய சாவை' அவன் என்றும் மறந்ததில்லை.

நெல்லியடியில்தான் அவனுடைய முதல்களப் போர். இங்கேதான் 2.7.82 அன்று ரோந்துப் பொலீஸ் படையினரைச் சாகடித்து ஷிறு கொண்ட தன் போராட்ட வரலாற்றின் முதல் அத்தியாயத்தை எழுதினான். ஒப்பிலாத அந்த மாவீரன் தொடர்ந்து கண்ட களங்கள் ஒன்றா? இரண்டா?

சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதல் — உமையாள்புரம் ராணுவ வாகனங்கள் மீதான அதிரடி — 13 இராணுவ வெறியர்களை முதன்முறை பலிகொண்ட திருநெல்வேலி வரலாற்றுப் போர் — களுவாஞ்சிக்குடி பொலீஸ் நிலையத் தாக்குதல் — திருக்கோவில் நீதி மன்றத்தில் துரோகி ஒருவன் மீதான துப்பாக்கிப் பிரயோகம் — ஈச்சிலம்பற்றை முற்றுகை தகர்ப்பு — கட்டைப்பறிச்சான் கண்ணி வெடித்தாக்குதல் —

பாலம்பட்டாறு இராணுவ மோதல் — புலிகள் வரலாற்றில் முதன்முதல் இராணுவத்தின் L.M.G. வகைத் துப்பாக்கியைக் கைப்பற்றிய பட்டித்திடல் கவச வண்டி தகர்ப்பு — இறால்குழி சுற்றி வளைப்பு மீறல் போர் — 3 ஆம் கொலனி இராணுவ நேரடி மோதல் வாகரை கண்ணிவெடி அதிரடித் தாக்கு — தெஹிவத்த போலீஸ் கமாண்டோக்கள் கடத்திச் சென்று நடுக்காட்டில் கற்பழிக்க முயன்ற தமிழ்ப் பெண்களை மீட்டெடுத்த தீரப்போர் எமது விடுதலை வரலாற்றில் முதல்தடவை சிங்கள ஏகாதிபத்தியத்தின் ஹெலிகாப்டர் போர்விமானத்தை சுட்டு வீழ்த்திய கூனித்தீவு முற்றுகை உடைப்பு — சம்பூர் யுத்தம் — வெருகல் விடுதலைப்புலிகள் முகாம் வளைப்பு முயற்சி முறியடிப்பு — ஆம்... கணேஸ் புகழின் எல்லை கடந்த மாவீரன்.

தமிழ் ஈழத்தின் வடக்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான காரை நகர் தொடக்கம் தெற்கெல்லைக் கிராமங்களில் ஒன்றான திருக்கோயில் வரை களங்கள் பார்த்த கணேஸ் தமிழ் ஈழம் முழுவதையும் தன் இரண்டு கால்களால் அளந்தான். யாழ்ப்பாணம் — மன்னார் — வவுனியா — திருக்கோணமலை — மட்டக்களப்பு என்று நீண்டு கிடந்த தமிழ் ஈழத்தை எத்தனை ஆறுகள் — உப்பேரிகள — கடல்நீர் ஓடைகள் இடைநின்று பிரித்தாலும் 'ஒற்றைப்பாலமாய்' அத்தனை இடைவெளிகளையும் நிரப்பித் தமிழ் ஈழத்தை இணைத்து நின்ற அவன் செயல் — வடக்குக்கும் கிழக்குக்கும் வேலி போட நினைப்போருக்கு வரலாறு கொடுத்த சரியான அடியாகும்.

கந்தளாய் என்னும் கிராமத்தில் எளிமையான குடும்பத்தில் பிறந்த கணேஸ் — ஆடம்பரம் இல்லாதவனாய் — எளிமையானவனாகவே கடைசி வரை வாழ்ந்தான் புலிகள் அவனை விரும்பினார்கள் என்று சொல்வதைவிட அவனைப்போல் இருக்க விரும்பினார்கள் என்பதே பொருத்தமானது.

கூனித்தீவின் அழகான உப்பாற்றங்கரையில் புலிகள் அவனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து மகிழ மகிழ பேசுவார்களே — வெருகல் மண்ணுக்குப் பச்சை வண்ணம் பூசும் வயல்களில் புலிகளின் கைகளைப் பற்றியபடியே சிரிக்கச் சிரிக்கப் பேசி அவன் உலா வருவானே — ஓ! அந்த நாட்கள் மிக மிக இனிமையானவை.

இசுலாமியர் — இசுலாமியர் அல்லா தாா இடையே மதக்கலவரத்தை ஏற்படுத்தித் தமிழினத்தைப பிரிக்கச் சிங்கள ஆட்சியாளர் முனைந்த ஒரு சந்தர்ப்பத்தில் — கலவரத்தை நிறுத்த மூதூர் நகருக்கு பிரசைகள் குழுவை அனுப்பினான் கணேஸ். அக்குழுவைக் கூலிப்படையினர் கைது செய்தபோது போராடி அவர்களை அவன் மீட்ட களப்போர் இன்னொரு மயிர்சிலிக்கும் வாலாற்று நிகழ்வே. புலிகளுக்குப் பக்கத்தில் மட்டுமல்ல — மக்களுக்குப் பக்கத்திலும் அவன் நெருக்கமாகவே நின்றான்.

சாவு அந்த மாவீரனைச் சந்தித்த நாள் கொடுமையானது!

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பெரிய பாலம் என்ற இடத்தில் 5.11.86 அன்று 4 மணி அளவில் நிகழ்ந்த இராணுவத்தின் சுற்றிவளைப்பில் மேஜர் கணேஸ் — நெருப்பின் நடுவில் ஐந்து ஆண்டுகள் நின்று விளையாடிய விடுதலைப்புலி — நேர்நின்று எதிரிகளை மோதி நிமிர்ந்த தலையோடு மரணத்தை ஏற்றுக்கொண்டான்

தமிழீழத் தலைவர் பிரபாகரனின் மாபெரும் துப்பாக்கிகளில் ஒன்று மௌனத்தைத் தழுவிற்று.

ஓ!... கணேஸ்!...

நீ போய்விட்டாயா? இல்லை...!

அகதிகள் முகாமில் இருந்து உன் தாய் ஆசையோடு உனக்கென்று சமைத்துக் கொடுத்த சோற்றுப் பொட்டலத்தோடு உன் தந்தை பயந்து பயந்து உன்னைக் காண வருவாரே....

அந்தச் சோற்றுப் பொதியை அவிழ்த்து வைத்து — 'ஒவ்வொரு பிடியாய்ப் பிடித்து நீ புலிகள் வாயில் ஆசையோடு ஊட்டுவாயே —

நீ ஊட்டிய சோறு எங்கள் உடலில் இரத்தமாகிவிட்டதையா.

நடக்கிறோம் —தொடர்ந்து நடக்கிறோம்.

அதே உப்பாற்றங்கரை..... அதே வயல்வெளிகள்!



லெப். ஜானைதின்
(ஜோன்சன். 30.12.85)



க. நாகராஜா
(ஜோசப். 30.12.85)


## விடுதலைப்புலிகள் காலண்டர்

15"×20" ஆர்ட் பேப்பர்
4 பக்கங்கள். விலை ரூ.5

விடுதலைப்புலிகள் இதழுக்கு அன்பளிப்பு செய்ய விரும்புவோரும் சந்தா கட்ட விரும்புவோரும் A. இராஜாராம் என்ற பெயருக்கு காசோலை மூலமாகவோ மணி யார்டர் மூலமாகவோ பணம் அனுப் பலாம்.

சந்தா ரூ.25

தபால் பெட்டி 928, அடையார்
சென்னை—600 020.




மட்டக்களப்பு பிராந்தியத்தில் விடுதலைப்புலிகளின் பயிற்சி.

www.eelamview.com